1997 முதல்

# தேசம்

இதழ் - 48
மே, 2017

முரண்பட்ட கருத்துக்களுக்கான களம்!

## தமிழ் தேசியமும் எதிர்காலமும்

- ரகுமான் ஜான் ⇨ பக்கம் 28

## பிரேமானந்தாவும் தீர்க்கதரிசி

- விஜயக்குமார் ⇨ பக்கம் 25



## பிரித்தானியத் தேர்தல்:
# ஜெரிமி கோபினின்
# பிரித்தானியப் புரட்சி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தலையங்கம்

## தெற்கில் வெள்ளமும் வடக்கில் வறட்சியும்

இலங்கையை ஏனைய சில நாடுகளுடன் ஒப்பிடுகையில் இங்கு இயற்கை அனர்த் தங்களும் அதன் மூலம் ஏற்படும் இழப்புகளும் குறைவானதே. 2004 இல் இடம்பெற்ற சுனாமியைத் தவிர பேரழிவுகள் என்ற வரையறையில் இழப்புகள் ஒப்பீட்டளவில் குறைவே. ஆனால் ஒரு உயிரின் இழப்பே பல உயிரிழப்புகளுக்குச் சமனானது.

மே மாத பிற்பகுதியில் தென்பகுதியில் பெய்த கடும் மழையினால் மண்சரிவு ஏற்பட்டும் வெள்ளத்தினாலும் 150 பேருக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டு உள்ளனர். இயற்கை அனர்த்தங்கள் மனிதனின் கட்டுப்பாட்டு விதிகளுக்கு அப்பாற்பட்டது. ஆனாலும் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் இழப்புகளை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு.

மழை. சுறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்கள் இலங்கையில் காலத்துக்கு காலம் நிகழ்ந்தே வருகின்றது. கடந்த கால அனர்த்தங்களில் இருந்து அரசு இதுவரை எதனையும் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. இதன் விளைவாக உயிரிழப்புகள் ஏற்படும் போது அவை வெறும் புள்ளி விபரங்களாக பதிவு செய்யப்படுகின்றனவே அல்லாமல் அனர்த்தங்களின் தாக்கத்தை குறைப்பதற் கான முகாமைத்துவம் செயல்வடிவம் பெறவில்லை.

இவ்வாறான கடுமையான மழைவீழ்ச்சி உடைய பிரதேசங்களின் பூவியியல் ஸ்திரணத்தை அளக்கின்ற அளவு முறைகள் பயன்பாட்டில் உள்ளது. மண் சரிவு அபாயமுடைய பகுதிகளை அடையாளம் கண்டு அவ்வாறான பிரதேசங்கள் வதிவிடத்திற்கு தகுதியற்றனவாக அடையாளப்படுத்தப்பட்டு அங்குள்ளவர்க ளுக்கு அவர்களோடு கலந்தாலோசித்து மாற்று வாழ்விட ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

நீண்ட காலத்தில் மண்சரிவை கட்டுப்படுத்தும் வகையில் பாதுகாப்பு தாங்கிகள் அரண்கள் அமைக்கப்பட வேண்டும். மண்சரிவை தடுக்கும் இயற்கை அரண்கள் அமைக்கப்பட வேண்டும்.

இலங்கையின் தென்பகுதி ஆறுகளும் குளங்களும் நிறைந்த நீர் விநியோக வசதியுள்ள பிரதேசம். இந்த ஆறுகளையும் குளங்களையும் ஆழப்படுத்தியும் ஆறுகளில் நீர் பாய்வதை தடுக்கும் தடைகளை நீக்கி தங்கு தடையின்றி வேகமாக நீரைப் பாய வைப்பதன் மூலமும் குளங்களில் நீரை சேகரிப்பதன் மூலமும் வெள்ள அனர்த்தத்தை மட்டுப்படுத்த முடியும்.

இலங்கையில் தென்பகுதியில் கடும் மழை காரணமாக அழிவு ஏற்பட வடபகுதியில் கடும் வறட்சியினால் மரக்கறிகளின் விலை அதிகரித்து உள்ளது. கடும் வறட்சி காரணமாக மரக்கறிகளை பயிரிடுவதும் அவற்றுக்கு நீர் பாய்ச்சுவதும் கடினமாக உள்ள நிலையில் மரக்கறி வகைகளின் உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளதாலேயே விலையேற்றம் ஏற்பட்டு உள்ளது.

நீண்ட காலத்தில் தென்பகுதியில் இருக்கும் அதீத நீர் வளத்தை வடக்கு நோக்கிக் கொண்டுவருவது விவசாய உற்பத்தியில் தங்கி இருக்கும் வடக்குக்கு அவசியமானது. இதன் மூலமாகவும் தெற்கில் வெள்ளப் பாதிப்பால் ஏற்படும் அனர்த்தங்களை கட்டுப்படுத்த முடியும். துறைசார் வல்லுனர்கள் இவ்விடயங் களை ஆராய்வதும் அரசு அவ்வாலோசனைகளுக்கு அமைய செயற்படுவதும் நாட்டின் எதிர்காலத்துக்கு நன்மையளிக்கும்.

'தேசம்' சஞ்சிகை இதழ் 46 ஏப்ரல் 2017 Thesam Publication Ltd இனால் வெளியிடப்படுகிறது. 'தேசம்' பிரஜைகள் ஊடகவியலையும் ஊக்குவித்து வருகின்றது.

இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'தேசம்' சஞ்சிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களின தோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இச்சஞ்சிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

ஆசிரியர் குழு
Thesam
73, Cary Road
Leytonstone
London
E11 3LG
United Kingdom

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரித்தானியத் தேர்தல்:

# ஜெரிமி கோபினின் பிரித்தானியப் புரட்சி!

த. ஜெயபாலன்

இலங்கையானாலும் அமெரிக்காவானாலும் அரசியல் என்பது கொள்கையற்றது அல்லது ஆளும் குழுமத்தின் ஒரு சிறுபிரிவினருக்கே ஆனது என்ற நிலை மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு உள்ளது. பிரித்தானிய அரசியல் களமும் தொழிற்கட்சியின் தலைமையை ஜெரிமி கோபின் கைப்பற்றும் வரை இப்பொது விதியின் கீழேயே செயற்பட்டு வந்தது. பிரித்தானியாவின் ஆளும் பழமைவாதக் கட்சி கொன்சவேட்டிவ் கட்சியும் ரொனி பிளேயரின் காலத்தில் புதிய தொழிற்கட்சி ஆக்கப்பட்ட தொழிற்கட்சியும் பெரும்பாலும் தங்கள் கொள்கைகளில் பாரிய முரண்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை.

தொழிலாளர்களது உரிமைகளை, மக்களது அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி போன்றவற்றை உறுதிப்படுத்த வேண்டிய தொழிற்கட்சி இவ்விடயங்களில் சமரசம் செய்ய ஆரம்பித்துளூ செல்வந்தர்களை பிரதிநிதித்துவம் செய்யும் முதலாளித்துவக் கட்சியான கொன்சவேடிவ் கட்சியாகவே மாறியது. ரொனி பிளயர் தொழிற்கட்சியின் இடதுசாரி சமத்துவக் கொள்கைகளைக் கைவிட்டு வலதுசாரிகளின் பக்கம் நோக்கி கட்சியை முன்நகர்த்தினார். 1997 முதல் பத்து ஆண்டுகளில் தொடர்ச்சியாக மூன்று தேர்தல்களிலும் வெற்றிபெற்று தொழிற்கட்சியை பெரும்பாலும் வலதுசாரி பாராளுமன்ற உறுப்பினர்களால் நிறைத்தார். கொன்சவேடிவ் கட்சி அதிதீவிர வலதுசாரிக் கட்சியாக மாற பிரித்தானிய குறுகிய ஆளும் குழுமத்துள் தொழிற்கட்சியும் சேர்ந்துகொண்டது.

பரந்துபட்ட மக்கள் இரு பெரும் கட்சிகளினதும் ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டனர். வங்கிகள் உட்பட்ட பல்தேசிய நிறுவனங்களின் அதீத லாபமீட்டும் கட்டுப்பாடற்ற செயற்பாடுகளால், ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு அரசே நிதி வழங்கி அந்நிறுவனங்களை பொருளாதார வீழ்ச்சியை வைத்தும், லாபமீட்ட வைத்தது. இவை எல்லாவற்றாலும் பாதிக்கப்பட்டது அப்பாவிகளான பரந்துபட்ட மக்களே. மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்கள் மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டிய அடிப்படைப் பொறுப்புகளில் இருந்து தங்களை விடுவித்துக் கொண்டனர். அடிப்படை வாழ்வாதார உதவிகள் மட்டுப்படுத்தப்பட்டது, சுகாதார சேவைகளுக்கான நிதிப் பங்களிப்பை அரசு குறைத்தது, கல்விக்கட்டணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பல்கலைக்கழகக் கல்விக்கட்டணத்தை உயர்த்த மாட்டோம்" என்று பாராளுமன்றம் சென்ற நிக் கிளேக் தலைமையிலான லிபரல் டெமோகிரட் கட்சி தனது கொள்கைகளோடு ஓரளவுக்காவது ஒத்துப் போகும் தொழிற்கட்சியோடு அணிசேராமல், தனது கொள்கைக்கு முற்றிலும் எதிரான கொள்கையுடைய கொன்சவேடிவ் கட்சியோடு 2010இல் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்தனர். பல்கலைக்கழகக் கல்விக் கட்டணத்தை 9000 பவுண்களாக உயர்த்துவதற்கு துணை போயினர்.

பிரித்தானியாவில் தற்போது பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் ஒரு பட்டதாரி 30000 பவுண்கள் முதல் 50000 பவுண்கள் வரையான கடன்சுமையோடே வெளியேற நிர்ப்பந்திக்கப்படுகிறார். அவ்வாறு வெளியேறும் பட்டதாரி வேலை எடுக்கின்ற பட்சத்தில் சராசரியாக 20000 பவுண்கள் சம்பளத்துடனேயே வேலையை ஆரம்பிக்கின்றார். இப்பட்டதாரிகள் தம்மீது சுமத்தப்பட்ட கல்விக்கடன் சுமையோடு, ஒரு வீட்டை வாங்குவதற்கு, வங்கி அவர்களுக்கு வீட்டுக்கடன் வழங்க வாய்ப்பே பெரும்பாலும் இல்லை. அதனாலேயே நடுத்தர வயதைத் தாண்டிய போதும் தற்போது பிரித்தானியாவில் பெற்றோருடன் தங்கி வாழ்கின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.


சுகாதார சேவைகளில் நெருக்கடி, பாடசாலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதிக் குறைப்பு, போக்குவரத்துச் சேவைகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. பிரித்தானியாவில் லீட்ஸ் என்ற நகரில் மாணவிகள் மாதவிலக்குக்கான சுகாதார அங்கிகள் வாங்க வசதி இல்லாமல் பாடசாலைக்கு வராமல் இருக்கின்றனர். இலவச உணவு வங்கிகளை நோக்கிச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. ஒரு புறம் பரந்துபட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுச் செல்ல மறுபுறத்தில் மில்லியனெயர்களின் எண்ணிக்கை பிரித்தானியாவில் உயர்ந்து செல்கின்றது.

அரசு சமத்துவத்தை வழங்கி பரந்துபட்ட மக்களது வாழ்நிலையை மேம்படுத்துவதற்குப் பதிலாக சமூகத்தில் தெரிவு செய்யப்படும் ஒரு பிரிவினர்க்கு மட்டும் முன்னேறிச் செல்வதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அதனை அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கப்படுகின்றது என்று நம்ப வைக்கின்றது. தனியார் கல்விக்கூடங்கள், கிரம்மர் ஸ்கூல் - தெரிவுமுறைப் பள்ளிகள், சுகாதார மற்றும் காப்புறுதித் திட்டங்கள் என்று பல்தேசிய நிதி நிறுவனங்கள் கொள்ளை இலாபமீட்டுவதற்கு வழியமைத்துக்கொடுக்கின்றது. சம வாய்ப்பு சம சந்தர்ப்பம் என்பதெல்லாம் முற்றிலும் போலித்தனமானதாகவே அமைந்துள்ளது.

இந்தப் பின்னணியிலேயே தனது வாழ்க்கைக் காலம் முழுவதும் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் ஒரு மக்கள் போராளியாகச் செயற்பட்ட ஜெரிமி கோபின் பலத்த எதிர்ப்புகளுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் அடிமட்ட ஆதரவாளர்களின் அமோக ஆதரவுடன் தொழிற்கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் அடிமட்டத்தைத் தவிர கட்சியின் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள், ஊடகங்கள் அனைத்துமே ஜெரிமி கோபினை மிக மோசமாக மனித நேயமற்று நடத்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எனது சொந்த அனுபவத்தில் சொல்வதானால், எனது மகன் இயல்பில் மென்மையானவன் யாரையும் நோகும்படி ஏதும் சொல்லமாட்டான். அவன் இரண்டாம் நிலைப் பள்ளியில் கற்கின்ற போது பல தடவை வன்மம் கொண்ட மாணவர் குழுவினால் பகிடிவதைக்கு உட்பட்டு மனம் உடைந்து வீட்டுக்கு வருவான். அப்போதெல்லாம் என் மனம் கொந்தளிக்கும். ஒரு அரசியல் பண்பு நிறைந்த, எப்போதும் நேர்மையுடன் செயற்படுகின்ற, தான் சொல்வதைச் செய்கின்ற, வாக்குத் தவறாத, மிக எளிமையான மனிதரான ஜெரிமி கோபினை பாராளுமன்ற விவாதங்களில் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன், தற்போதைய பிரதமர் திரேசா மே போன்ற அரசியல் வாதிகளும் ஊடகங்களும் எள்ளி நகையாடுவதும் அவரை கவுண்டமனி ஸ்ரைலில் கேலி செய்வதும் தொலைக்காட்சியில் பார்க்கின்ற போது எனக்கு என் மகன் பகிடிவதைக்கு உட்பட்ட போது ஏற்படும் மனக்கொந்தளிப்பு ஏற்படும். ஒரு மக்கள் போராளி, பரந்துபட்ட மக்களை நேசிக்கின்ற, நேர்மையான, வாக்குத் தவறாத ஒரு மனிதன் ஒரு போதும் தோற்றுப் போவதற்கு அனுமதிக்கக் கூடாது.

ஜெரிமி கோபின் தலைமையிலான தொழிற்கட்சி இத்தேர்தலில் வரலாறு காணாத வகையில் படுதோல்வி அடையும் என்றே தேர்தல் அறிவிப்பு வெளியிட்டவுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புகள் தெரிவித்தன. “ஜெரிமி கோபின் பலவீனமான தலைவர்ஸ குடிவரவு, பாதுகாப்பு, பொருளாதார விடயங்களில் தொழிற்கட்சியையோ ஜெரிமி கோபினையோ நம்ப முடியாது, பிரித்தானியாவின் அணு ஆயுதத் திட்டத்தை ஜெரிமி கோபின் ஆதரிக்கவில்லை, அணு ஆயுதத்தை தான் முதலில் பயன்படுத்த மாட்டேன் என்று ஜெரிமி கோபின் தெரிவித்து இருக்கிறார்ஸ இது எதிரிகளுக்கு வாய்ப்பாக அமையும் என்றெல்லாம் கட்சிக்குள்ளும் ஆளும் கட்சியினரும் ஊடகங்களும் எள்ளி நகையாடின. ஜெரிமி கோபின் வீதியில் இறங்கி குரல் எழுப்பி போராடுவதற்கே லாயக்கு அவருக்கு நாட்டை ஆளமுடியாது என்றார் பிரதமர் திரேசா மே.

ஆனால் ஜெரிமி கோபின் எவர் மீதும் தனிப்பட்ட ரீதியான தாக்குதலை நடத்தாமல் தனது கொளகையில் உறுதியாக போராடுவதற்கே பிறந்தவராகச் செயற்பட்டார். தொழிற்கட்சி மிகச் சக்தி வாய்ந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளி யிட்டு கொள்கை அடிப்படையில் ஏனைய கட்சிகளுக்கு சவால் விட்டது. கட்சி உத்தியோகபூர் வமாக தனது விஞ்ஞாபனத்தை வெளியிடுவதற்கு முன்னரேயே கட்சியில் ஜெரிமி கோபினுக்கு எதிரானவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் விஞ்ஞாப னத்தை ஊடகங்களுக்கு கசிய விட்டு "ஜெரிமி கோபினின் தேர்தல் விஞ்ஞாபனத் தைக்கூட பாதுகாப்பதற்கு அவரிடம் யாரும் இல்லை. இவர் எப்படி நாட்டை ஆட்சி செய் வார்" என கிண்டலடித்தனர். "ஜெரிமி கோபினின் தேர்தல் விஞ்ஞாபனம் ஒரு மாயாஜாலம் அதில் உள்ளவை எல்லாம் நல்ல அம்சங்கள் தான் ஆனால் நடைமுறைச்சாத்தியமற்றது" என்று நளினம் செய்தனர்.

ஜெரிமி கோபினின் தொழிற்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் மக்களிடம் சென்றடைய ஆரம்பிக்க கருத்துக்கணிப்புகளின் போக்கு மாறியது. மக்கள் ஜெரிமி கோபினின் கொள்கைகளுடன் உடன்பட விளைந்தனர். தொழிற்கட்சிக்கும் கொன்சவேடிவ் கட்சிக்கும் இடையேயான வித்தியாசம் 15 முதல் 20 விதமாக இருந்து இப்போது 8 முதல் 5 வீதமாக குறைக்கப்பட்டு உள்ளது. இக்கட்டுரை எழுதப்பட்டு கொண்டிருக்கையில் தேர்தலுக்கு ஒரு வாரமே உள்ள நிலையில் ஜெரிமி கோபின் பிரித்தானியாவின் பிரதமர் ஆவதற்கான வாய்ப்புகள் அதிகமாகி உள்ளது.

**பிரித்தானிய மக்களை சிந்திக்க வைத்த ஜெரிமி கோபினின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்த முக்கிய விடயங்கள் என்னையும் கவர்ந்திழுத்தது.**

1. எனது மூன்று பிள்ளைகள் அரசின் சாதாரண பாடசாலையில் கற்கின்றனர். எனது மூத்த மகன் அடுத்த வருடம் பல்கலைக்கழகம் செல்ல உள்ளார். ஜெரிமி கோபின் மாணவர்கள் பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கு செலுத்தும் கட்டணத்தை நீக்குவதாக உறுதி அளித்துள்ளார். எனது பிள்ளைகள் ஒவ்வொருவரும் 30000 முதல் 50000 பவுண் வரையான கடன் சுமையில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.

2. எனக்கு தற்போது 46 வயது. உயர் குருதி அழுத்தம் உடையவன். எனக்கு ஒரு சொந்த வீடும் உண்டு. நான் எனது வயோதிபத்தில் டிமென்சியா அல்லது மரடைப்பு போன்ற நோயினாலோ பாதிக்கப்பட்டால் என்னை வீட்டில் வைத்து பராமரிக்கும் செலவை எனது வீட்டின் பெறுமதியில் 100,000 பவுண்களை விட்டு மிகுதியை எடுப்பதாக கொன்சவேடிவ் கட்சி தெரிவித்து உள்ளது. ஆனால் தொழிற்கட்சி வயோதிபத்தில் உள்ளவர்களைப் பராமரிப்பது அரசின் கடமை என்றும் தாங்கள் பராமரிப்புச் செலவை எங்கள் வீடுகளின் பெறுமதியில் இருந்து எடுக்கப் போவதில்லை என்றும் தெரிவித்து இருக்கின்றார். நாங்கள் சிறுகச் சிறுக சேமித்ததை எங்கள் பிள்ளைகளிடம் ஒப்படைப்ப தற்கு ஜெரிமி கோபின் வழியேற்படுத்தி உள்ளார்.

3. வீடு இல்லாதவர்களுக்கு அவர்களின் வாங்கும் சக்திக்கு உட்பட்ட வீடுகளை கட்டுவதற்கும் கவுன்சில் வீடுகளைக் கட்டி வீடற்றவர்களுக்கு உதவுவதற்கும் உறுதி அளிக்கப்பட்டு உள்ளது.

4. பிரித்தானியாவில் ரெயில் கட்டணங்கள் ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிக அதிகம். மிக நெரிசலானவை. குறித்த நேரத்தில் இயங்குவதில்லை. அதனால் பிரித்தானியாவில் ரெயில்வே யை தேசியமயமாக்கப் போவதாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் ரெயில்வே இல் இருந்து வரு வருமானம் ரெயில்வே இன் மீள்புனரமைப்புக்கு பயன்படுத்தப்படுவதுடன் கட்டணங்களும் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்படும். அரசும் இதனூடாக வருமானத்தை ஈட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தற்போது மின் கட்டணங்களும் எரிவாயுக் கட்டணமும் உயரந்துகொண்டே செல்கின்றன. குறிப்பிட்ட 5 எரிசக்தி நிறுவனங்கள் கொள்ளை லாபமீட்டுகின்றனர். இதனைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒரு எரிசக்தி நிறுவனமாவது அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்று ஜெரிமி கோபின் உறுதி அளித்துள்ளார். இதன் மூலம் ஏனைய நிறுவனங்களுக்கு போட்டியாக அரச எரிசக்தி நிறுவனம் குறைந்த விலையில் எரிசக்தியை வழங்க நிர்ப்பந்திக்கப்படும். மேலும் அரசும் அதனூடாக வருமானத்தை ஈட்டும்.

6. நானும் எனது குடும்பமும் ஏனைய பல மில்லியன குடும்பங்கள் போன்று தனியார் மருத்துவக் காப்புறுதி அற்றவர்கள் பிரித்தானியாவின் தேசிய சுகாதார சேவையில் தங்கி உள்ளவர்கள். பிரித்தானியாவில் இலவச தேசிய சுகாதார சேவையை அறிமுகப்படுத்தியவர்கள் தொழிற்கட்சியினர். பிரித்தானிய தேசிய சுகாதார சேவைகளுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற உறுதி அளிக்கப்பட்டு உள்ளது.

7. நாம் விரும்பியோ விரும்பாமலோ பிரித்தானியா ஐரோப்பாவில் இருந்து வெளியேறிவிட்டது. ஆனால் இதனால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் தனிச் சந்தை மற்றும் ஐரோப்பிய பொருளாதார பிரதேசத்துக்குள் பிரித்தானியா செயற்படும்! என ஜெரிமி கோபின் உறுதி அளித்துள்ளார். குறிப்பாக சர்வதேச மயப்பட்டுவரும் இளைய சமூதாயத்திற்கும், பொருளாதார விருத்திக்கும் இது மிக அத்தியவசியமானது.

8. ஜெரிமி கோபின் ஒரு தொழிற்சங்கவாதி. அவருக்கு தொழிற்சங்கத்தின் முழுமையான ஆதரவும் உண்டு. தொழிலாளர்களின் உரிமையை தொழிற்சங்கங்களின் உரிமையை உறுதிப்படுதவும் குறைந்தபட்ச சம்பளத்தை 2020 முதல் 10 பவுண்களாக உயர்த்தவும் உறுதி அளித்துள்ளார்.

9. நாங்கள் பிரித்தானியாவிலும் சிறுபான்மை இனம் என்ற வகையில் கொன்சவேடிவ் கட்சியினுடைய உண்மைக்குப் புறம்பான குடிவரவாளர்களுக்கு எதிரான பிரச்சாரங்கள் இனக்குரோதத்தை வளர்த்துவிட்டுள்ளது. தொழிற்கட்சி குடிவரவாளர்கள் தொடர்பில் சிறந்த முகாமைத்துவத்தைக் கையாளும்! என்று உறுதி அளித்துள்ளது.

10. தொழிற்கட்சியின் வெளிநாட்டுக்கொள்கை முரண்பாடுகளைத் தீர்ப்பதாகவே அமையும் என்றும், அதன் ஆட்சியில் இறுதியாக சமாதானத்தை கொண்டுவரும் என்று தெளிவாக உறுதிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு மட்டுமே பிரித்தானிய இராணுவம் ஈடுபடுத்தப்படும் என்றும் உறுதிஅளிக்கப்பட்டு உள்ளது. ஜெரிமி கோபின் தனது பாராளுமன்ற வாழ்க்கைக்காலம் முழுவதிலும் இராணுவத் தலையீடுகளுக்கு எதிராக சமாதானத்துக்காகக் குரல் எழுப்பியவர். அமெரிக்க அரசுடன் இணைந்து அப்கானிஸ்தான், ஈராக், லிபியா, சிரியா ஆகிய நாடுகளில் இராணுவத் தலையீட்டை மேற்கொண்டு, அந்நாடுகள் பயங்கரவாதத்தின் விளைநிலங்களாக மாற்றப்பட்டுளூ தலையீடு செய்த நாடுகளுக்கு இப்பயங்கரவாதம் 'வெவ்வேறு வடிவங்களில் ஏற்றுமதி செய்யப்படுவதன் விளைவே பிரித்தானியாவில் தொடரும் பயங்கரவாதத் தாக்குதல்கள்.

"பலருக்காக சில பேருக்கு அல்ல" என்ற கோசத்துக்கு அமைய தொழிற்கட்சித் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஜெரிமி கோபின் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு உள்ளார். அரச ஊழியர்களுக்கு இடையேயான ஊதிய வேறுபாடு 20 மடங்கிற்கு அதிகமாக இருக்கக் கூடாது போன்ற இன்னும் பல திட்டங்களை ஜெரிமி கோபின் தலைமையிலான தொழிற்கட்சி அறிவித்து உள்ளது.

இத்திட்டங்களுக்கான செலவீனங்களை அதி உச்ச வருமானம் ஆண்டுக்கு 80000 பவுண்களுக்கு மேல் ஈட்டுபவர்களிடம் இருந்தும் அதி உச்ச லாபம் ஈட்டும் கோப்பிரேட் நிறுவனங்களிடம் இருந்தும் வரி மூலம் வசூலிக்க உள்ளதாகவும் தொழிற்கட்சி அறிவித்து உள்ளது.

ஜூன் 8 பிரித்தானியாவின் ஆட்சிப் பொறுப்பு யாரிடம் என்பதைத் தீர்மானிக்கும் நாள். ஜெரிமி கோபின் இன் தேர்தல் விஞ்ஞாபனம் எல்லாவற்றையும் ஒரு பக்கம் வைத்துவிட்டு தமிழர்களாக ஒரு கணம் சிந்திப்போம். அகதிகளாக அடைக்கலம் தேடி வந்த நாம், எங்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அன்று வெறும் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஜெரிமி கோபினின் உழைப்பை, ஆதரவை மறந்துவிடக்கூடாது.

11800 பேருக்கு தனது கையொப்பம் இட்டு திருப்பி அனுப்பும் உத்தரவை தடுத்தவர் ஜெரிமி கோபின். அப்போது அவர் பிரதமர் கனவில் மிதந்தவர் அல்ல. பதவி கருதி சோரம் போன ஒரு அரசியல் வாதி அல்ல. கொள்கை பிடிப்போடு எம் மக்களுடன் கைகோர்த்து நடந்த ஒரு இலட்சிய வாதி.


கொன்சவேடிவ் அரசு அகதிகளைத் திருப்பி அனுப்ப எத்தனித்த போதெல்லாம், எதிர்த்து போராடிய ஒருவர். அவரிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படும் பட்சத்தில், ஏழைகளின் உணர்வு நிலையில் இருந்து முடிவெடுக்கும் ஒரு உன்னத சூழலைத் தோற்றுவிக்க முடியும்.




மேலும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டெமோகிரட் கட்சி வேட்பாளராக கில்லாரி கிளின் டன் க்கு எதிராக போட்டியிட்ட பேர்னி சான்டர்ஸ் அமெரிக்கா வில் ஒரு தூசணம் போல் பார்க் கப்பட்ட "சோசலிசம்" என்ற சொல்லை பலரும் புரிந்து கொள்ளும் ஒன்றாக மாற்றியவர். அவர் Our Revolution: A Future to Believe In என்ற தனது நூலை வெயிளிடுவதற்காக யூன் முதல் வாரத்தில் பிரித்தானியா வருகின்றார். அப்போது அவர் ஜெரிமி கோபினை ஆதரித்து கருத்து வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஜெரிமி கோபின் க்கு உள்ளார்ந்த உந்துதலை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டமைப்பு

## அரசியல் காரணங்களால் மட்டும் அரசுடன் இணையவில்லை! அதற்கு ஒரு பொருளாதாரப் பரிமாணமும் உள்ளது!

வி சிவலிங்கம்

சமீப காலமாக அரசியல் அமைப்பு மாற்றம் தொடர்பான விவாதங்கள் மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. அரசியல் அமைப்பு பேரவையால் உருவாக்கப்பட்ட கமிட்டிகள் தமது அறிக்கையை கையளித்த பின்னர் இடைக்கால அறிக்கை ஒன்றினை பிரதமர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதனை அரசியல் அமைப்பு சபை விவாதித்து உரிய திருத்தங்களுடன் அரசியல் அமைப்பை வரையத் தொடங்க வேண்டும். ஆனால் 2015 ஜனாதிபதித் தேர்தலிலும், அதே ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலிலும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல், தேர்தல் முறையை மாற்றுதல், தேசிய இனப் பிரச்சனையைத் தீர்த்தல் என்பன முக்கிய குறிக்கோள்களாக முன் வைக்கப்பட்டன. ஆனால் இவை தொடர்பாக அரச தரப்பால் இதுவரை பொதுவான இணக்கத்திற்கு வர முடியவில்லை.

அரசின் போக்கில் காணப்பட்ட இழுபறிகள் இரண்டு பிரச்சனைகளை அடையாளப்படுத்தியது. அதாவது ஜெனீவா தீர்மானங்களின் அடிப்படையில் போர்க்குற்ற விசாரணைகளை உந்தித் தள்ளி, சர்வதேச உதவியுடன் தீர்வை நோக்கிச் செல்வதா? அல்லது அரசியல் அமைப்பு மாற்றங்கள் மூலம் அரசியல் பிரச்சனைகளுக்குத் தீர்வை ஏற்படுத்தி தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதா? என்ற நிலமை உருவாகியது.

2015ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கிடைத்த பெரு வெற்றியைத் தொடர்ந்து தேசிய சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மத்தியிலே புதிய நம்பிக்கை பிறந்தது. குறிப்பாக அரசாங்கத்தில் பங்குபற்றும் ஆவல் கூட்டமைப்பின் ஒரு சாரார் மத்தியிலே ஏற்பட்டது. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தைக் கட்டி எழுப்ப அவ்வாறான இணைவு அவசியம் தேவை எனவும் கருதப்பட்டது. அத்துடன் போரின் காலத்திலும், அதன் பின்னரும் காணப்பட்ட நவ தாராளவாத பொருளாதார நடவடிக்கைகள் அரசியல்வாதிகள் பலரை ஊழலுக்குள் தள்ளியிருந்தது. இதனால் அரச அதிகாரத்தை அனுபவித்தவர்கள் பணக்காரர்களானார்கள். நவ தாராளவாத பொருளாதார நடைமுறை அரசியல் அதிகாரத்தினை ஓர் குறிப்பிட்ட பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினரிடையே ஒப்படைப்பதாகவே அமைந்தது. இது சர்வதேச அளவிலும் காணப்பட்டது. நடைமுறையிலிருந்த பொருளாதாரம் அதிகார வர்க்கம், வர்த்தக சமூகம், சமூக உயர் மட்டம் போன்றவற்றை நோக்கியதாக சென்றது. நாட்டில் காணப்பட்ட தேர்தல் முறை பணத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுதற்கான வாய்ப்புகளையும் வழங்கியது.

இவை அரசியல் கட்சிகளின் போக்கில் மாற்றங்களை எற்படுத்தின. உட் கட்சிகளின் அதிகாரங்கள் படிப்படியாக உயர் மட்டங்களின் கட்டுப்பாட்டிற்குள் அல்லது செல்வாக்கிற்குள் சென்றது. குறிப்பாக தற்போது தமிழ்க் கட்சிகளின் உயர் மட்டங்களில் பலர் செல்வந்தர்களாக உள்ளனர். இவர்களின் அரசியல் ஆரம்பம் அவ்வாறு இருக்கவில்லை. அவ்வாறெனில் அவர்கள் செல்வந்தர்களாக மாற்றம் பெற உதவிய காரணிகள் வேறு எவையாக இருக்க முடியும்? இம் மாற்றங்களே ஏற்கெனவே




சுதந்திர காலம் முதல் இற்றை வரை எதுவித பொருளாதார அடிப்படைகளையும் கொண்டிராத தமிழ் அரசியல் தனது இக்கட்டான நிலைமையை மக்கள் முன் வைக்க முடியாத நிலையில் உள்ளது. வெறும் தமிழ்க் குறும் தேசியவாத அரசியலின் மூலம் உணர்ச்சிகளைத் தூண்டி மக்களின் வாக்குகளைக் கொள்ளையிட்ட காலம் அஸ்தமிக்கத் தொடங்கியுள்ளது.

குறிப்பிட்டது போல அரசில் அங்கமாக மாறுவதற்கான வாதங்களை நகர்த்தியது. நவ தாராளவாத பொருளாதார கொள்கைகளை மகிந்த அரசு நடைமுறைப்படுத்திய போதிலும், பூகோள அரசியல் நலன்களில் உடன்பட்டுச் செல்லாமையால் 2015 இல் தோல்வி அடைய நேரிட்டது.

இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளும் கூட்டாக அமைந்த அரசு என்பதால் கூட்டமைப்பினரிடையே அரசில் இணைவதற்கான ஆர்வம் காணப்பட்டது. மத்திய அரசின் பொறுப்புகளில் பங்கேற்றுக் கொள்வதன் மூலம் அரசியல் மாற்றத்தை உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய முடியும் எனவும் கருதப்பட்டது. இருப்பினும் கடந்த கால அனுபவங்களும், அரசு ஏமாற்றினால் பாராளுமன்ற ஆசனங்கள் பறி போய்விடும் என்ற அச்சமும் அவர்களை எதிர்க் கட்சியில் கொண்டு சேர்த்தன. உத்தியோகபூர்வ எதிர்க்கட்சி என்ற வகையிலும், நிழல் அரசு என்ற வகையிலும் முன்பிருந்த நிலமைகளை விட கௌரவமான இடத்தில் அமர்ந்தனர். இம் மாற்றங்கள் புதிய அரசியல் நிலமைகளைத் தோற்றுவித்தன. ஜனாதிபதி, பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோர் மிக நெருக்கமாக செயற்பட்டனர்.

எனவே நவ தாராளவாத அரசியல் பொருளாதாரம் சமூகத்தில் காணப்பட்ட உயர் மட்டத்தினரிடையே இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் நெருக்கத்தை ஏற்படுத்த உதவியது. இதற்கு சில வரலாற்றுக் காரணிகளும் உள்ளன. சுதந்திரத்திற்குப் பின்னர் காணப்பட்ட அரசியல் போக்ககள் சில முக்கியமான அனுபவங்களை அரசியல்வாதிகளுக்கு வழங்கியுள்ளது. குறிப்பாக சமீபகால வரலாற்றை நோக்கினால், 2002ம் ஆண்டு புலிகளுக்கும், அரசிற்குமிடையேயான போர் நிறுத்த ஒப்பந்த தோல்விகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளால் பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்ற முடிவுக்கு நிலமைகளைத் தள்ளி போருக்கான வழிகளை உக்கிரப்படுத்தியது. போர்க் காலத்திலும் அதனைத் தொடர்ந்து 2009ம் ஆண்டு ஏற்பட்ட ராணுவ வெற்றி என்பன நவ தாராளவாத பொருளாதார திட்டங்களை உள் நாட்டில் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் நிறைவேற்ற உதவின. இதுவே ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றை நெருக்கமாக இணைத்தன.

இப்போரின் காரணமாக இதே போன்று தமிழ் அரசியலும் கணிசமான பாடங்களைக் கற்றது. இன்று தேசிய இனப் பிரச்சனைக்கு அடிப்படைத் தீர்வாக முன் வைக்கப்படும் அதிகார பரவலாக்க யோசனைகள் 1987ம் ம் ஆண்டின் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களாகும். இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக உருவாகிய 13வது திருத்தத்தினை கூட்டமைப்பு ஏற்கத் தவறியது. அதனைத் தொடர்ந்து பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சந்திரிகாவினால் வைக்கப்பட்ட தீர்வுப் பொதியையும் கூட்டமைப்பு ஏற்கத் தவறியது. 2009ம் ஆண்டின் புலிகளின் தோல்வியும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்வதேச நகர்வுகளும் கூட்டமைப்பின் தலைமைக்குள் பல பண்பு மாற்றங்களை ஏற்படுத்தியது. இம் மாற்றங்களுக்கான பிரதான காரணியாக இருந்தது எதுவெனில் கூட்டமைப்பின் தலைமைகளுக்குள் காணப்பட்ட நவ தாராளவாத போக்குகளாகும்.


மகிந்த காலத்தில் நடைமுறைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட குழுவினரின் ஆதிக்கத்தில் இருந்தது. இவற்றின் பலன்கள் மக்களைச் சென்றடைய வில்லை. பதிலாக அக் குழுவின் உறவினர்களிடையே பகிரப்பட்டது. ஒரு புறத்தில் சிங்கள பௌத்த தேசியவாதத்தினை உச்சாடனம் செய்துகொண்டு மறு புறத்தில் தேசிய பொருளாதாரத்தை ஒரு சிறு பிரிவினர் கட்டுப்படுத்தியதை மக்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. இதன் காரணமாக 2015 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் குடும்ப ஆட்சியை மாற்றியதே தவிர நவ தாராளவாத பொருளாதாரம் ஏற்படுத்தி வரும் தாக்கங்களை அகற்றவில்லை. பதிலாக அதனை மேலும் பலப்படுத்தினார்கள்.

நவ தாராளவாத அரசியல் பொருளாதாரம் அரசியல் கட்டுமானத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தி அதன் செயற்பாடுகளை இலகுவாக்குகிறது. பொருளாதார அபிவிருத்தி என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வையில் உள் பிரதேசங்களில் உள்ள உயர் மட்டங்களையம் பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட வைக்கிறது. எனவே அதிகார பரவலாக்கம் முன் வைக்கப்படுகிறது. இவற்றின் அதிகாரங்களையும் இந்த உயர் மட்டத்தினர் காலப் போக்கில் கைப்பற்றுகின்றனர். தற்போதைய இலங்கை அரசு மாகாண சபைகளை பிரதேச அபிவிருத்திக்கான செயற்பாட்டு மையங்களாக மாற்ற எண்ணுகிறது.




மேற்குறிப்பிட்ட அரசியல் பொருளாதார அடிப்படைகளிலிருந்தே இன்றைய தமிழ் அரசியலின் போக்கை அடையாளம் காண வேண்டும். தற்போதைய தேசிய ஐக்கிய அரசில் கூட்டமைப்பு வெறுமனே அரசியல் காரணங்களால் இணைந்திருப்பதாக கருதுவது தவறு. அதற்கு ஒரு பொருளாதாரப் பரிமாணமும் உள்ளது என்பதை தற் போது காண முடிகிறது. அரசினால் சமர்ப்பிக் கப்பட்ட மூன்று வரவு செலவுத் திட்டங்களையும் எதிர்க் கட்சியில் இருந்தவாறே கூட்டமைப்பு ஆதரித்துள்ளது இதற்கு நல்ல உதாரணமாகும்.

அரசியல் அமைப்புத் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்கள் புதிதானவை அல்ல. பாராளுமன்றத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் காணப்படும் பிளவுகள் அதனைத் தொடர்ந்து உணர்த்தி வந்தன. புதிய அரசியல் அமைப்பின் வடிவம் தொடர்பாக அதாவது அரசின் கட்டுமானம் ஒற்றை ஆட்சியா? அல்லது சமஷ்டியா? அரசின் உயர் மட்டம் ஜனாதிபதியா? பாராளுமன்றமா? பௌத்தத்திற்கு வழங்கப்படும் இடம், உத்தியோக மொழி, அதிகார பரவலாக்கத்தின் விஸ்தீரணம், தேர்தல் முறை போன்ற அம்சங்கள் இன்னமும் முடிவில்லை. அத்துடன் புதிய அரசியல் யாப்பை மக்கள் வாக்கெடுப்பிற்கு விடுவதா? இல்லையா? என்ற கேள்வியும் எழும்பியுள்ளது.

அரசில் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பு இவை குறித்து எதனையும் மக்களுக்குத் தெரிவிக்கத் தயாராக இல்லை. எது கிடைக்கும்? எது கிடையாது? என்பது குறித்து கூட்டமைப்பின் ஒரு சிறு குழுவினர்களே அறிவார்கள் என்ற நிலை காணப்படுகிறது. அக் கட்சியின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் எதுவுமே தெரியாத நிலையில் உள்ளனர். அந்த அளவிற்கு உள் கட்சி ஜனநாயகம் இல்லை. அரசிற்கும், கூட்டமைப்பிற்கும் இடையேயுள்ள உடன்பாடு இரகசியமானது. வெளியிடப்பட்டால் இனவாத சக்திகள் குழப்பிவிடுவார்கள் எனக் கூறி வெளியிட மறுக்கின்றனர். ஆனால் தினம் தினம் வெளிவரும் செய்திகள் மட்டுமல்ல அரச அமைச்சரான மனோ கணேசன் அவர்களும் அரசியல் அமைப்பில் எதிர் பார்ப்பது எதுவும் இல்லை என்கிறார். அவ்வாறானால் என்ன உடன்பாடு உள்ளது? ஏன் அரசை தொடர்ந்து ஆதரிக்க வேண்டும்? என்ற கேள்வி எழுகிறது.

ஏற்கெனவே குறிப்பிட்டது போல நவ தாராளவாத அரசியல் பொருளாதாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமைப்பு முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளதால் அதன் நலன்களைப் பாதுகாக்க அங்கு தொடர்ந்தும் இணைந்திருப்பது தேவையாக மாறியுள்ளது. தற்போதைய அரசு ஏற்பட்டுள்ள கடன் சுமைகளைக் குறைக்கவும், சில அபிவிருத்திகளை மேற்கொள்வ தற்கும் கடன்களைப் பெறுவதற்கும் நாட்டின் வளமுள்ள நிலங்களை, கடல் பகுதிகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்க தயாராகியுள்ளது. இந்த நிலங்களும், வளங்களும் வடக்கு, கிழக்கு பகுதிகளிலும் வெளி நாடுகளுக்கு தாரை வார்த்துக் கொடுக்கப்பட் டுள்ளது. வெளி நாட்டு நிறுவனங்களுடன் பங்குதாரர்களாகவுள்ள சிங்கள தனியார் நிறுவனங்கள் இந்த நிலங்களைக் கட்டுப்படுத்துகின்றன. தமிழ்ப் பிரதேசங்களின் நிலங்களைப் பாதுகாப்பதாகக் கூறும் கூட்டமைப்பினர் இந்த நிலங்கள் தனியார் மற்றும் அந்நிய நிறுவனங்களுக்கு விற்கப்படுவது குறித்து மௌனமாக இருப்பது நவ தாராளவாத அரசியல் பொருளாதாரத்தோடு உடன்பட்டுச் செல்லும் போக்கின் விளைவுகளாகும்.

இந் நிலை தொடருமாயின் இப்பிரதேசங்களின் அபிவிருத்தியை வேறு யாரோ தீர்மானிப் பார்கள். அங்குள்ள வேலை வாய்ப்புகளை யாரோ பெறுவார்கள். மொத்தத்தில் அம் மக்களின் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டுவிடும். மக்கள் வாழும் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்தினை அம்மக்கள் தீர்மானிக்க முடியாவிடில் அவர்கள் மீண்டும் இரண்டாம் தர பிரஜைகளே.

சுதந்திர காலம் முதல் இற்றை வரை எதுவித பொருளாதார அடிப்படைகளையும் கொண்டிராத தமிழ் அரசியல் தனது இக்கட்டான நிலமையை மக்கள் முன் வைக்க முடியாத நிலையில் உள்ளது. வெறும் தமிழ்க் குறும் தேசியவாத அரசியலின் மூலம் உணர்ச்சிகளைத் தூண்டி மக்களின் வாக்குகளைக் கொள்ளையிட்ட காலம் அஸ்தமிக்கத் தொடங்கியுள்ளது. இதுவே கேப்பாபுலவு, மே 18ம் திகதிய நிகழ்வுகளில் மக்கள் அரசியல் வாதிகளை அவமானப்படுத்தும் போக்குகளாகும். இந்தக் கலாச்சாரத்தை வளர்த்தவர்களே அதனை அறுவடை செய்கிறார்கள். இவை ஆரோக்கியமான அரசியலை நகர்த்த உதவப்போவதில்லை.





எதிர் வரும் காலம் மீண்டும் கசப்பான அனுபவங்களை நோக்கிச் செல்லப் போகிறது. இதனைத் தடுக்க வேண்டு மெனில் கூட்டமைப்பு மக்களிடம் நிலமைகளை விளக்க வேண்டும். இந்த ஆற்றல் இருப்பதாக தெரியவில்லை. இந்த வெற்றிடத்தைப் பயன்படுத்தி மீண்டும் உணர்ச்சி அரசியல் போரில் பாதிக்கப்பட்ட மக்களைப் பயன்படுத்த முயற்சிக்கின்றார்கள். போர் முடிவடைந்து 8 ஆண்டுகளாகியும் இந்த மக்கள் தமது உடன் பிறப்புகளை எண்ணி தினமும் கண்ணீர் வடிப்பதை எந்த நாகரிகம் படைத்த சமூகமும் அனுமதிக்காது. அதனைப் பயன்படுத்தி அரசியல் நடத்துவது மிகவும் கொடுமையானது. தமிழ் மக்களின் அரசியல் தலைமையை வைத்திருக்கும் கூட்டமைப்பு மக்களோடு பேச வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேதனைகளின் வலியை அனுபவிப்பவனே மிக அதிகமாக உணர்வான்.
அதனால்தான் போராட்டங்கள் ஒடுக்கப்பட்ட மனிதர்களிடமிருந்து எழும்புகின்றது.

# அகதி வாழ்வு

>> பாரதி

**ஒரு** கஷ்டத்தை அனுபவிப்பவனுக்கும் அதை வெளியில் நின்று பார்ப்பவனக்குமான வித்தியாசம் என்பது மிகப்பெரியது. வேதனைகளின் வலியை அனுபவிப்பவனே மிக அதிகமாக உணர்வான். அதனால்தான் போராட்டங்கள் ஒடுக்கப்பட்ட மனிதர்களிடமிருந்து எழும்பு கின்றது. அகதிகள் வாழ்வும் அது போன்ற ஒன்றுதான். மிகப்பொரிய செல்வந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவனக்குப்பெயர் அகதிதான். அகதி என்ற சொல் ஒரு இனத்தின் அடையளட மாகிவிடுவதும் முடிவின்றி தொடர்வதும் மனரீதியில் கொன்று போடும் உளவியல் பிரச்சனையாகும்.

உரிமைகளுக்காகப் போராடிய ஒரு இனம் தன் சொந்த நாட்டிலிருந்து விரட்டப்பட்டு வேறு பல நாடுகளுக்கு விரட்டப்பட்டு வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்த நிலையில் அங்கும் மனிதனாக வாழ உரிமைகள் மறுக்கப்படடு திக்கு திசை தெரியாமல் உயிர்வாழவே திண்டாடுவது எத்தனை கொடுமையானது

அகதிகள் நிலை தொடர்பான ஐக்கிய நாடுகளின் உடன்பாடு என்பது அகதிகள் யார் என்பதையும் புகழிடம் கொடுத்த நாடுகளின் பொறுப்புக்களையும் வரையறை செய்கிறது. ஆனால் அகதிகள் உரிமைகளை ஐநா தனது எஜமான்களுக்கு ஏற்றால் போல்தான் கையாண்டுள்ளது என்பதை மறக்கக் கூடாது. ஐநாவின் அகதிகளுக்கான உரிமைகள் தொடர்பில் கையெழுத்திட்டுள்ள நாடுகள் அதனடிப்படையிலேயே அகதிகளுக்கான பிரச்சனையை பார்க்க வேண்டும். ஆனால் அகதிகளின் பிரச்சனை என்பது எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியானவையல்ல. ஒரு அகதிக்கு அரசியல் பிரச்சனை இருக்கிறது அல்லது இல்லை என்பதை அந்தந்த நாடுகள் வரையறுத்து வைத்திருக்கும் கேள்வி கோவைகளின் அடிப்படையில் முடிவெடுக்கப்படுகின்றது. அகதியை விசாரிக்கும் அதிகாரிகள் பலருக்கு அகதிகளின் நாட்டுப் பிரச்சனைப் பற்றிய ஆழமான புரிதல்கள் இருப்பதில்லை. அகதிகள் தமது பிரச்சனையை கதையாகவே சொல்ல வேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. சொல்லப்படும் கதைக்கு (அரசியல் பிரச்சனைக்கு) ஆதாரம் கேக்கப்படுகின்றது. பல சித்திரவதைகளுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளாகி தப்பித்து வந்திருப்பவனை இது மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தி கிழிப்பதாகவுள்ளது. ஒருவனின் கதையை முன்னறிமுகமில்லாத ஒருவரிடம் தெரியாத வேற்று மொழியில் சொல்வது என்பது இலகுவான காரியமில்லை. கேள்விக ளும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாத அதிகார தொணிகொண்டதாயும் பிழை கண்டுபிப்ப தையே நோக்காக கொண்டதாயும் அமையும் போது எதிரில் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திலிருப்பவன் மனரிதியாய் பல தாக்கங் களுக்கு உள்ளாகிறான். இவற்றை எதையுமே அந்த அதிகாரிகள் கணக்கில் எடுப்பதில்லை. இவர்கள் அதற்கான பயிற்சி பெற்றவர்களும் அல்ல. முடிவில் மிக இலகு வாக அவர்களது அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

" ஒருவரை வேலை செய்யக் கூடாது என்று மறுப்பது, அவனது எல்லா உரிமை களையும் பறிப்பதற்க்கு சமனாகும். இங்கி லாந்தின் அகதி ஒருவருக்கு வாரத்துக்கு 35 பவுணகள் கொடுக்கப்படுகிறது. அதை கொடு த்து விட்டு "நீ வேலை செய்யக்கூடாது உன் எல்லாத் தேவைகளுக்கும் இது போதுமானது" என்று அச்சுறுத்தப்படுகிறது. இந்த பணம் உயிர் வாழ எந்த விதத்திலம் போதுவதில்லை. எனவே சட்டத்துக்கு விரோதமாக வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். "



இப்படியான அடிதளத்திலிருந்துதான் ஒரு அகதி தனது உரிமைகளுக்கா போராட வேண்டிய வனாய் இருக்கின்றான். அகதிகள் பிரச்சனை பரந்துபட்டது அதனை பரந்த மனதுடனேயே அனுகவேண்டும். அகதிகளுக் கான சட்டங்களிலும் திருத்தங்களை கொண்டு வரவேண்யுள்ளது. அகதி என்பவனுக்கு எல்லா அடிப்படை உரிமைகளும் இருக்கிறது என்று பேசுவதில் தான் நியாயம் இருக்கின்றது. அந்த உரிமையில்லை இந்த உரிமையில்லை என்பது அகதிகள் என்பவர்கள் குற்றம் செய்தவர்கள் என்ற உணர்வையே கொடுக்கும். எனவே அசரியல் தஞ்சம் கேட்பவனுக்கு அந்நாட்டு குடி மக்களுக்கு இருக்கின்ற அனைத்து அடிப்படை உரிமைகளும் அவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

குறைந்தபட்சம் ஐநா சொல்லியிருக்கின்ற அகதிகளுக்கான உரிமைகளைக் கூட பல ஐரோப்பிய நாடுகள் அறவே கொடுப்பதில்லை. இங்கிலாந்து அகதிகளுக்கு வதிவிடங்கள் சரியாக கொடுக்கப்படுவதில்லை. நிரந்தர முகவரி இல்லாதவர்களுக்கு என்.எச்.எஸ் (மருத்துவம்) இல்லை. சட்ட ரீதியதியாக வேலை செய்ய அனுமதிக்கப்படுதில்லை. சுதந்திரமாக நடமாட முடிவதில்லை. கல்வி கற்க முடியாது. திருமணம் முடிக்க முடியாது. உலக வல்லரசுகள் என்றும் மனி உரிமை சாசனங்களின் ஆசான்கள் என்றும் ஜனநாயகத்தின் பிறப்பிடம் என்றும் கூறிக்கொள்ளும் சாம்ராஜியங்களில்தான் அகதிகளுக்கு இன்றும் இந்த நிலை.

ஒருவரை வேலை செய்யக் கூடாது என்று மறுப்பது, அவனது எல்லா உரிமைகளையும் பறிப்பதற்க்கு சமனாகும். இங்கிலாந்தின் அகதி ஒருவருக்கு வாரத்துக்கு 35 பவுணகள் கொடுக் கப்படுகிறது. அதை கொடுத்து விட்டு "நீ வேலை செய்யக்கூடாது உன் எல்லாத்தேவைகளுக்கும் இது போதுமானது" என்று அச்சுறுத்தப்படுகிறது. இந்த பணம் உயிர் வாழ எந்த விதத்திலம் போதுவதில்லை. எனவே சட்டத்துக்கு விரோதமாக வேலைசெய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட விரோதமாக வேலை கொடுப்பது யார் என்று பார்த்தால் அவர்கள் பெரும்பாரும் இவர்களைப் போலவே அகதிகளாக்கப்பட்டு சொந்த நாட்டை விட்டு விரட்டியடிக் கப் பட்ட முந்தைய தலைமுறை முதலாளிகள். இந்த முதலாளிகள் பல கடைகள் மற்றும் சொத்துக்கள் வைத்திருப்பவர்கள். இவர்களில் பலர் அதி தீவிர தமிழ்ஈழ தேசியம் பேசுவர்க ளாவும் இருப்பார்கள். ஆனால் அடிபட்டு இடிபட்டு நொந்து செத்துக்கொண்டிருக்கும் இந்த அகதி நிலை மறுக்கப்பட்ட ஈழ இளை ஞர் யுவதிகளை அடிமாட்டுவேலை வாங்கி ஊதிபெருத்து இருபார்கள்.

இத்தகைய அகதி இளைஞர் யுவதிகளையே இவர்கள் தேடி தேடி வேலைக்கும் அமர்த் துவார்கள். காரணம் இவர்காளால் எந்தவித எதிர்புணர்வையும் காட்டமுடியாது என்பத னாலாகும். மிக குறைந்த சம்பளத்துக்கும் எவ்விதமான தொழிலாளர் நல சலுகைகளும் அற்ற ஊழியர்களாக இவர்களை மட்டும்தான் வைத்திருக்க முடியும் என்பதினாலாகும். இவர்களை இன்னும் சிலர் தமது சொந்த வீட்டு தேவைகளுக்காகவும் சம்பளமற்ற வேலையாட் களாக பயன்படுத்திக் கொள்வார்கள். இப்படி யாக ஒவ்வொரு இளைஞர் யுவதிகளின் அகதிவாழ்வும் பெரும் துயர் சொல்லும் கதை.

> குறைந்தபட்சம் ஐநா சொல்லியிருக்கின்ற அகதிகளுக்கான உரிமைகளைக் கூட பல ஐரோப்பிய நாடுகள் அறவே கொடுப்பதில்லை. இங்கிலாந்து அகதிகளுக்கு வதிவிடங்கள் சரியாக கொடுக்கப்படுவதில்லை. நிரந்தர முகவரி இல்லாதவர்களுக்கு என்.எச்.எஸ் (மருத்துவம்) இல்லை. சட்ட ரீதியதியாக வேலை செய்ய அனுமதிக்கப்படுதில்லை. சுதந்திரமாக நடமாட முடிவதில்லை. கல்வி கற்க முடியாது. திருமணம் முடிக்க முடியாது.




அடுத்ததாக குறிப்பிட்டு சொல்ல வேண்டிய வர்கள் வக்கீல்கள். பெயருக்கு ஏற்றால் போல் வேலை தெரிந்திருக்காவிட்டாலும் கூட அதிகளை ஏய்த்து பிழைக்கும் தந்திரம் கை வரப்பெற்றவர்கள். பஞ்சமா பாதங்களில் ஒன்றை எடுத்துவிட்டு இவர்களின் செயல்களை சேர்த்துக்கொள்ளலாம். மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போன்றுதான் இவர்களுடைய செயல்கள் இருக்கும்.

பைலை விரிப்பதுக்கு ஒரு தொகை பணம், அதை படிப்பதற்க்கு ஒரு தொகை பணம் என்று வாங்கிகொண்டு கடைசிவரை கேஸ் முதற் சுற்றில் வென்று விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்வார்கள். இவர்களுக்கு சட்டத்தை வளைக்கக் கூடிய சட்ட வல்லமையிருக்கோ இல்லையோ தம்மை நம்பி வந்த அப்பவிகளை நன்றாக சுரண்ட தெரிந்திருக்கும். கேஸ் கிடைத்து விட்டால் நீ தான் இலட்சம் இலட்சமாக உழைத்துக் கொள்வாயே என்று பிடுங்கும் பணத்துக்காக சமதானம் வேறு சொல்லி கொள்வார்கள்.

அடுத்தவர்கள் தமிழ் அமைபுக்களைச் சேர்ந்தவர்கள். தமிழ் மக்களின் பிரச்சனையை பேசுவதாக சொல்லிக்கொண்டு வந்தவர்கள் இவர்கள். இந்த இளைஞர் யுவதிகள் தமது அகதி அந்தஸ்த்து கோரிக்கைக்கு வலுசேர்க இவர்களிடம் கடிதங்களுக்கு காலம் காலமாக அலைகிறார்கள். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதங்களுக்கு விலைபேசப்படுகிறது. யாருக்காக அமைப்பு என்பதையும் மறந்து தனியார் வர்த்தக ஸ்தாபனம் போல் நடவடிக்கைகள் அமைக்கின்றன. எதைத் தொட்டாலும் பணம். அமைப்புக்களின் கூட்டங்களுக்கு தவறாமல் இளைஞர்கள் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள். அங்கு கூடுகின்ற இளையோருக்கு எந்தவிதமான அரசியல் அறிவையும் அவர்கள் கொடுப்பதில்லை. சுதந்திரமாக பேச கலந்துரையாட வாய்ப்பளிக்கப்படுவதில்லை. கடந்து வந்த அரசியல் பற்றிய வாதங்கள் விமர்சனங்கள் பேசப்படுவதில்லை. எதுவுமே கிடைக்காதவர்களாக பார்வையாளர்களாக மட்டும் இருந்து விட்டுப்போகிறார்கள். கோர்ட்டும் சூட்டும் போட்டு 5ஸ்ட்டார் கோட்டலில் தங்குவதற்க்கு மக்களின் பணம் விரையமாக்கப்படுகிறது.

> இன்று களத்தில் மக்களின் பிரச்சனையை பேசுவதும் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சனையை கையில் எடுத்திருப்பதும் இளையோர்தான். அதில் ஒன்றுதான் அகதிகளின் உரிமைகளுக்காக மக்களை வீதியில் இறங்கி போராடுவது. இங்கிலாந்தில் எத்தனையோ தமிழ் அமைப்புக்கள் எத்தனையோ இருக்கின்றன. அதில் நீண்ட காலம் தலைவர்களான மூத்தவர்கள் உள்ளனர் ஆனால் இத்தகைய பிரச்சனை ஒன்றையாவது கையில் எடுத்து செயற்பட்டதில்லை




சில அமைப்புகள் இளைஞர்களை தரம் பிரித்தும் வைத்திருக்கிறார்கள். யாழ்ப்பாண தமிழ் பேசும் இளைஞர்களை ஒரு மாதிரியும். இன்னும் சிலரை கொழும்பு தமிழ் பேசும் பெடியன்கள் என்றும் மறைவில் சுட்டுகின்றனர். யார் எந்த மொழியில் பேசவேண்டும் எப்படியான மொழியில் பேசவேண்டும் எந்த அரசியலை பேசவேண்டும் எனபதையெல்லாம் இவர்கள்தான் முடிவெடுப்பார்களாம். யார் அகதி யாருக்கு அகதி அங்கிகாரம் கிடைக்க வேண்டும் என்பதையும் இவர்கள்தான் சொல்லவேண்டுமாம். தமிழ் பேச தெரியாதவர்கள் தமிழ் அமைப்புக்களில் தமிழ் மக்களுக்காக வேலைசெய்யக்கூடாதாம். இப்படியெல்லாம் சொல்பவர்கள்தான் டேவிட் கமருனை தமது தலைவர் என்றும் தமிழீழப் பிரச்சனைக்கு தீவைப்பெற்று தரக்கூடியவர் என்றும் கொண்டாடியவர்கள். இத்தகைய சுயநல முரணை மக்கள் இலகுவாக புரிந்து கொண்டு விடுவார்கள் என்பதே அவர்களுக்கு இப்போதுள்ள பயம்.

சாதாரண இளைஞர்கள் தளத்தில் இயங்குவது பழைமை வாத கோட்சூட் போட்ட தமிழ் தலைவர்களுக்கும் அமைப்புக்களுக்கும் அடிவயிற்றில் ஏதோ செய்கிறது போலும். தமக்கு இடம் தருவதை விட்டு விட்டு அரசியல் தெரியாத இளைஞர்களை கூட்டிவைத்து அரசியல் நிகழ்சி நடத்துவதாக ஊடகங்களை சாடுகின்றனர். இவர்களுக்கு மாற்றான எந்த சக்கதியும் வந்து விடக்கூடாது என்பதில் மிக கவனமாக இருக்கிறார்கள். இளைஞர்கள் அரசியல் தெளிவும் தளத்தில் இயங்குவதையும் இவர்களால் பேச முடியாத செயற்பட முடியாத எல்லையை சாதாரண இளையோர் தொடுவதும் அவர்களின் இருத்தலுக்கு ஆபத்து என்பதை இவர்கள் நன்கு அறிவார்கள்.

இன்று களத்தில் மக்களின் பிரச்சனையை பேசுவதும் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சனையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் எடுத்திருப்பதும் இளையோர்தான். அதில் ஒன்றுதான் அகதிகளின் உரிமைகளுக்காக மக்களை வீதியில் இறங்கி போராடுவது. இங்கிலாந்தில் எத்தனையோ தமிழ் அமைப்புக்கள் எத்தனையோ கலாமாக இருக்கின்றன. அதில் நீண்ட காலம் தலைவர்களான மூத்தவர்கள் உள்ளனர் ஆனால் இத்தகைய பிரச்சனை ஒன்றை யாவது கையில் எடுத்து செயற் பட்டதில்லை என்பது தான் உண்மை.





அகதிகளுக்காக மிகப் பெருந்தொகைப் பணத்தை செலவளிப்பதாக பொய்யான வதந்திகளை ஆளும் இங்கிலாந்தின் பழமைவாத கட்சி செய்து வருகிறது. ஆனால் இது உண்மைக்குப் புறம்பான விடயாகும். யுத்தத்துக்காவும் அகதிக ளிளை தடுப்பதற்க் காவும் செய்யும் செலவில் பாதியை கொடுத்தால் கூட அகதிகளின் பிரச்சனையை தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் அதை செய்ய இவர்கள் தயாரில்லை. நேற்றைய அகதி கள் தான் இன்றைய இங்கிலாந்தின் மிகப்பொரிய பொருளாதார பலமாக நிக் கின்றார்கள். ஐரோப்பிய எல்லைகளை மூட மதில் கட்டப்போகிறார்க ளாம். பல நாட்டின் எல்லைகளை சுவர் எழுப்பி தடுப்பது என்பது என்ன பச்சை தண்ணீ ரில் வடை சுடும்விடயமா? எத்தனை மில்லியன் பணம் தேவைப்படும் விடயம்? இந்த பணத்தில் அதிகளுக்காக என்னவெல்லாம் செய்துவிட முடியும். அவர்கள் வாழும் இடங்களில் குண்டையம் போட்டு சிதைத்து குற்றுயிராய் வரும் இந்த அகதிகளை தடுக்க சுவரும் எழுப்புவது என்பது எத்தனை மனிதநேயமற்ற கொடுமை

அகதிகளின் வருகையை சுவர் கட்டுவதினாலோ இல்லை ஐரோப்பாவுக்குள் அனுமதித்து விடுவதினாலோ முடிந்துவிடக்கூடிய ஒன்றல்ல. வல்லரசுகளின் பொருளாதார அரசியல் சமூக கொள்கைகளில் தங்கியிருக்கும் ஒன்று. அரசுகளை இயக்குகின்ற மிகப்பெரிய காப்பிரேட் நிவனங்களுக்கு ஏற்றால் போல் சட்டங்கள் கொள்கைகள் இருக்கும்மட்டும் அரசுகள் கார்ப்ரேட்டுகளின் பிடியிலிருந்து விடுபடாத நிலை வரும் மட்டும் உலகெங்கும் அகதிகள் உருவாக்கப்பட்டுக்கொண்டுதான் இருப்பார்கள் என்பது சர்வ நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களினதும் அவர்களின் தலைவர்களினதும் அவலநிலை





● அன்ரனி பீற்றர்

நான் ஒரு அவுஸ்ரேலிய குடிமகன், ஆனால் தற்போது இலங்கையின் உண்மையான நிலையை அறிந்து கொள்வதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ளேன். இலங்கைத் தமிழ் அரசியல் தலைவர்களுடனும் யாழ் பல்கலைக்கழக அரசியல் அறிவியல்துறை விரிவுரையாளர் களுடனும் கலந்துரையாடியள்ளேன். முப்பது வருட ஆயுத போராட்ட தோல்வியின் பின்னரும் இவர்களின் சிந்தனை கள் செயல்களில் மாற்றம் இல்லை. சிங்கள மக்களின் சனத்தொகையில் ஒப்பிடும் போது உலக தமிழர் ஐந்து மடங்கு, ஆனாலும் இன்று அவலநிலை. தமிழ்த் தலைவர்கள் உண்மையை உணராதவர்கள் அல்லது தங்களின் சுயநலத்திற்காக உண்மையை மறைப்பவர்கள் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. யாழ்ப்பாண பல்கலைகழக கலைப்பீட பீடாதிபதியின் வார்த்தைகள் "இன்று தமிழ் மக்கள் இலங்கையில் வாழ்கின்றார்கள் என்றால் அதற்கு காரனம் புலிகள், இறந்த புலிகள்தங்களது ஆவியினால் மக்களை பாதுகாக்கின்றார்கள்." தமிழ் தேசிய கூட்டமைபின் தலைவரின் வார்த்தைகள் "ஆயுத போராட்டம் முறைமையானதும், காலத்தின் தேவையுமாய் இருந்தது."

தமிழர்கள் இந்தியாவினால் திட்டமிட்டு உடைக்கப்பட்டுள்ளார்கள். இந்தியாவினால் ஆயுத இயக்கங்கள் தமிழரை பிரித்தாளுவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. ஆயுத போராட்டம் எமது ஆற்றல் உள்ள தலைவர்களை அழித்தும், கல்விமான்களையும் ஒற்றுமையையும் கணிசமான அளவு குறைத்துள்ளது. மேற்குலக நாடுகளில் உள்ள பல புகலிட இயக்கங்கள், அவற்றின் அரசியல் சாணக்கியம் இல்லாத தலைவர்கள் தமிழரின் பிரிவினையையும், தமிழர்களின் தலமைத்துவ வீழ்ச்சியையும் சான்று பகிர்கின்றன. இந்தியாவும், மேற்குலக நாடுகளும் தங்களின் தேவைகளுக்காக தமிழர்களை பயன்படுத்துகின்றன. ஆனால் தமிழ் தலைவர்களின் நடவடிக்கைகள் இந்திய, மேற்குலக நாடுகளின் தலைவர்களைப் போன்று புத்திசாலிதனமானதாக அமையவில்லை. தமிழ் தலைவர்கள் இந்திய அல்லது மேற்குலக நாடுகளின் தலைவர்களை பயன்படுத்தி தங்கள் மக்களின் தேவைகளையும், அபிலாசைகளையும் பூர்த்தி செய்ய இயலாத, வலுவற்ற, அறிவற்ற தலைவர்களாகவும், ஆனால் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை தங்களது சுயநலத்திற்காக பயன்படுத்துவதில் மாத்திரம் வல்லவரகளாகவும் விளங்குகின்றனர்.

இலங்கைத் தமிழ் தலைவர்களுக்கு தங்கள் கோரிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்தது.

இலங்கையை பிரித்தானியர்கள் ஆண்ட காலத்தில் இலங்கை தமிழ் தலைவர்கள் சுய ஆட்சியயையோ அல்லது தனி நாட்டு கோரிக்கையையோ முன்வைக்கவில்லை காரணம், பிரித்தானியர்கள் சிறுபான்மை தமிழர்களுக்கு அதிகமான சலுகைககளை வழங்கி னார்கள். பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தமிழர்கள் சிங்கள பெரும்பான்மையோருக்கு பிரதிநிதிகளாகவும் விளங்கியுள்ளனர். இதை நாம் ஜனநாயகம் அல்லது நேர்மையான பிரதிநிதித்துவம் என்று கருத முடியாது. இது பிரித்தானியரின் பிரித்தாழுமையின் சூழ்ச்சி என்றால் மிகையாகாது. தமிழர்கள் பிரித்தானியரின் வழிநடத்தல்களினால் எந்த ஒரு தீர்வையும் ஏற்க வலுவும் அறிவும் அற்றவர்களாக காணப்படுகின்றனர். இலங்கைக்கு சுகந்திரம் கிடைபதற்கு முன்னரே தமிழர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க சிங்கள ஆட்சித்தலைவர்களால் அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டது. 1926ம் ஆண்டு எஸ், டபில்யூ. ஆர்.டி பண்டாரநாயக்காவினால் சமஷ்டி ஆட்சி முறை முன்வைக்கப்பட்டது. இந்த தீர்வை 1927ம் ஆண்டு கண்டி சிங்களத் தலைவர்கள் ஆமோதித்து, மூன்று பாகங்கள் கொண்ட சமஷ்டி தீர்வை முன்வைத்தனர். வடக்கும், கிழக்கும் இணைந்த பாகத்தை தமிழர்களுக்கும், ஏனைய இரண்டு பாகங்களை சிங்கள பெருன்மையினருக்கும் என்ற தீர்வை முன்வைத்தனர். ஆனால் தமிழ் தலைவர்கள் இந்த தீர்வை ஏற்றுக் கொள்ளவில்லை.


இரண்டாவது சந்தர்ப்பம் ஜி ஜி பொன்னம்பலம் தலைவராக இருந்த போது இலங்கை அரசாங்கம் 40:60 என்ற தீர்வை முன்வைத்தது. அன்று தமிழரின் சனத்தொகை 40 சத வீதம் கூட இருக்கவில்லை ஆனால் இலங்கை அரசு 40:60 தீர்வை பெரும்தன்மையுடன் முன் வைத்தது குறிப்பிடத்தக்கது. இந்த தீர்வையும் தமிழ் தலைவர்கள் ஏற்கவில்லை மாறாக 50:50 என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த அரிய சந்தர்ப்பத்தையும் நழுவிட்டனர். 1970ம், 1980ம் ஆண்டு காலப்பகுதிகளில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெய வர்த்தனா மேற்குலக நாடுகளின் உதவியுடன் இலங்கையை சிங்கப்பூர் போன்று முன்னேற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டார். ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வின் செயற்பாடுகளை இந்தியா அச்சுறுத்தலாக கண்நோக்கியது. இந்நிலையில் இந்தியா இலங்கையின் உள் நாட்டுப்பிரச்சினையை தனக்கு சார்பாக கொண்டு தமிழ் ஆயுதகுழுக் களை உருவாக்கியது. இதன்மூலம் இந்தியா, இலங்கையை பிரித்தாண்டு தன்னுடைய தன்னாதிக்கத்தை நிலைநிறுத்தியது.

தமிழ்த் தலைவர்கள் இலங்கை அரசுடன் இணைந்து இலங்கையை முன்னேற்ற எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை, மாறாக அன்னிய நாடுகளின் சதிக்குள் அகப்பட்டு எமது இளைய சமுதாயத்தை தீவிரவாதிகளாக உருவாக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உள்நாட்டுப் போரை ஊக்கிவித்து, அன்னிய நாடுகளுக்கு சார்பான நடவடிக்கைகளில் தங்கள் சுய நலத்தை முன்னெடுத்து இன்பம் கண்டுள்ளனர். தமிழ், சிங்கள தலைவர்களின் தவறான நடவடிக்கைகளால் இலங்கையில் கலவரங்கள் தலைதூக்கின. இதன் விளைவாக தமிழ் மக்கள் அகதிகள் ஆக்கப்பட்டனர். தமிழ் மக்கள் மேற்குலக நாடுகளுக்கு இடம் பெயர்ந்தனர். இதனை தன்வசமாக்கிக் கொண்ட மேற்குலகநாடுகள் இந்து சமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்காகவும், தமது நாடுகளை இலங்கைத் தமிழர்களின் மனித வளத்தைக் கொண்டு முன்னேற்றுவதற் காகவும் தமிழரின் ஆயதப்போராட்டத்தை மறைமுகமாக புலம்பெயர்ந்த தமிழர்களூடாக ஆதரித்து வலுவாக்கினர். இது இந்தியாவை கதிகலங்க செய்தது. இதன் விளைவாக இந்தியா இந்திய - இலங்கை உடன்படிக்கையை இலங்கை அரசின் மீதும் தமிழ் ஆயுதக்குழுக்கள் மீதும் திணித்தது.



இந்த ஒப்பந்தமானது தமிழருக்கு கிடைத்த மூன்றாவது சந்தர்ப்பம் தமிழரின் சுதந்திரத்தையும் இலங்கையின் சமாதானத்தையும் பேணிப்பாதுகாப்பதற்கு. துரதிஸ்ரவசமாக புலம்பெயர்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை அறியாதவர்களாகவும் மேற்குலக நாடுகளின் கைப்பொம்மைகளாகவும் விளங்கினர். புகலிட மக்களின் தலைவர்கள் மேற்குலக நாடுகளின் வலைக்குள் சிக்குண்டு இவர்கள் இந்தியாவுக்கு எதிராக தூண்டிவிட்டனர். இந்த நடவடிக்கையானது இலங்கையின் வரலாற்றில் பாரிய அழிவுகளையும் சர்ச்சையையும் உருவாக்கியது. விஷேடமாக பிரதம மந்திரி ராஜிவ்காந்தியின் இழப்பு. தமிழ் தலைவர்களின் தவறான நடவடிக்கைகளினாலும் வழிகாட்டலினாலும் இலங்கையில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்களை இழந்துள்ளோம். இவ்வாறான நடவடிக்கைகளிலிருந்து நாம் தெளிவாக அறிந்து கொள்வது என்னவென்றால் எமது தழிழ் தலைவர்கள் அன்நிய நாட்டின் தேவையின் அடிப்படையிலும் தமது சுயநலன் கருதியும் அரசியலை முன்னெடுத்து வருகின்றனர். இவர்கள் தமிழ் மக்களுக்காகவோ அல்லது இலங்கை நாட்டிற்காகவோ அரசியல் புரிபவர்கள் அல்ல. இந்தியா ஆயுதக்குழுக்களை உருவாக்கியது. ஆனால் இலங்கையில் உள் நாட்டுப் பிரச்சினையை முப்பது வருடங்களுக்கு மேம்படுத்தியதற்குரிய எண்ணமோ வளங்களோ இந்தியாவிடம் இருக்கவில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தம் இதனை சான்று பகிர்கிறது.

இலங்கைத் தமிழர் அறிவுள்ளவர்களை மதிப்பதில்லை. இவர்கள் தங்களை தாங்களே எமாற்றுகின்றார்கள், சிங்கள மக்களையோ அல்லது உலகத்தையோ அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகலிட தமிழ் மக்களின் தலைவர்கள் போர் நடைபெறும் காலங்களில் மும்முரமாக பணங்களை யுத்தத்திற்காக சேகரித்தனர். ஆனால் இன்று இந்த இந்த மும்முரம் மக்களின் அவலநிலையை மாற்றுவதற்காகவோ அல்லது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற் காகவோ காட்டப்படவில்லை. இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்னவென்றால் புகலிட தமிழ் தலைவர்கள் தமது மக்களின் நலன் கருதி எந்த வித முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. ஆனால் தங்கள் பதவியையும் சுகபோகங்களையும் காப்பாற்றுவ தற்காக மேற்குலக நாடுகளின் கைப்பொம்மைகளாக தமிழ் மக்களிற்கு துரோகமிழைத்து வருகின்றனர். தமிழ் தலைவர்கள் தங்களின் நடவடிக்கைகளினால் இலங்கை, இந்தியத் தமிழ் மக்களையும், முஸ்லீம் மக்களையும், சிங்கள மக்களையும் அவலநிலைக்கு உள்ளாக்கியுள்ளனர்.

மேற்குலக நாடுகள் தமிழர்களை எவ்வளவு திறமையாக பிரித்தாண்டு தம் இலட்சியங் களை அடைந்து வருகின்றார்களோ அதே போன்று சிங்கள மக்களையும் பிரித்து ஆளுவது உறுதி. தற்போது மேற்குலக நாடுகள் இலங்கையை தங்கள் பிடிக்குள் வைத்திருக்கும் நோக்குடன் தங்கள் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர். இந்நிலையில் இலங்கை தனது அபிவிருத்தித் திட்டத்திற்காக சீனாவை நாடினால் மேற்குலக நாடுகள் தமிழர்களையும், ஐ. நா. சபையையும், இந்தியாவையும் பயன்படுத்தி இலங்கைக்கு போர்குற்றச்சாட்டின் அடிப்படையில் அழுத்தங்களை கொடுப்பார்கள்.

தற்போதைய இலங்கை அரசாங்கம் புலம்பெயர்ந்த மக்களின் அறிவு, ஆற்றல், வளங்களை இலங்கைக்கு பயன்படுத்த நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. எவ்வாறாயினும் மேற்குலக நாடுகள் இலங்கை மக்களுக்கு கல்வியையும், ஆற்றலையும், வளங்களையும் இலங்கையையோ அல்லது ஆசியாவையோ முன்னேற்றுவதற்காக வழங்கவில்லை. வழமையில் மேற்குலக நாடுகள் உலகை ஆழ்வதற்காக மற்றைய நாடுகளின் ஆற்றலையும், வளங்களையும் தமதாக்கிக்கொள்கின்றன. ஆகவே தற்போதைய இலங்கை அரசாங்கத் தின் நடவடிக்கைகள் பலன் அழிக்க வாய்ப்பில்லை என்பது எனது கருத்து.

உறங்காத உண்மைகளை உறங்கவைக்கும் ஆசியாவின் கீழ்தரமான இலங்கைத் தமிழ் தலைவர்கள்.

தமிழ் தலைவர்கள் தங்களின் சுயநலத்திற்காக அன்னிய நாடுகளின் உதவியுடன் தங்களின் புத்திஜீவிகளை திட்டமிட்டு ஒதுக்கியும், அழித்தும் வருகின்றார்கள். ஆசியாவில் தன்னுடைய புத்திஜீவிகளை அழித்த பெருமை இலங்கை தமிழனுக்குரியது என்றால் மிகையாகாது ஆசியாவில் வேறு எந்த இனமும் தமிழரைப்போன்று தன் புத்திஜீவிகளை அழித்தொழிக்கவில்லை. நான் யாழ்ப்பாணத்தில் ஆவணி 2015ம் ஆண்டு முதல் வகித்து வருகின்றேன் அரசியல்துறை, கல்வித்துறை, வியாபாரத்தை மருத்துவத்துறை, பாதுகாப்பு துறை, சுகாதாரத்துறை என்பவற்றை உண்ணிப்பாக அவதானித்தும், ஆராய்ந்தும் வருகின்றேன். என்னுடைய அவதானிப்பின் படி இந்திய தூதரகமும், மேற்குலகநாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களின் முகாமையாளர்களும் பொதுக்கூட்டங்களுக்கு பிரதம விருந்தினராக அழைக்கப்படுகின்றனர். தமிழ், சிங்கள, முஸ்லீம் புத்திஜீவிகள் தொடர்ந்தும் தமிழ் தலைவர்களால் புறக்கணிக்கப்படுகின்றனர். முப்பது வருட ஆயுதப்போராட்ட தோல்வி யின் பின்னரும் தமிழ் தலைவர்கள் அன்னியரை பின்பற்றுகின்றனர். இந்நிலையில் சுய ஆட்சியை தமிழர்களுக்கு வழங்கினால் அது அன்னியருக்கு வழங்குவதற்குச் சமன் என்பது எனது தீர்மானம். இது இந்த நாட்டையும், இந்துசமுத்திரத்தையும் பேராபத்துக் குள்ளாக்கும்.

இப்பொழுதும் இந்தியாவினதும், மேற்குலக நாடுகளினதும் உதவியுடன் கல்வி அறிவற்றவர்களும் காடையர்களும் பொய்யான தகமைத்துவத்தை தமிழ் மக்களிடையே பேணிபாதுகாத்து வருகின்றனர். போரின் போது ஆயுதங்கள் இவர்களுக்கு ஒரு பொய்யான தகமையை வழங்கின. தற்பொழுது மேற்குலக நாடுகளின் கடவுச்சீட்டுகளும், பணமும் இவர்களுக்கு ஒரு பொய்யான தகமைத்துவத்தை வழங்கி வருகின்றன. இப்படியான பொய்யான தகமைத்துவம் தமிழரை தொடர்ந்து பின்னடைவிற்கு அழைத்துச்செல்லும். அரசியலில் அனுபவம் இல்லாத தமிழர்கள் தொடர்ந்தும் மேற் குலக நாடுகளுடன் நெருக்கமாக ஒத்துழைத்து தமிழர்களுக்கு ஒரு தீர்வை முன்வைக் கலாம் என்ற கருத்தைமுன்வைத்து வருகின்றனர். இது முற்றிலும் முட்டாள் தனமானதும் “காந்தியை“ அவமதிப்பதாகவம் அமையும், இவர்கள் தொடர்ந்து காந்தியை அவமதிப் பார்களாயின் இவர்கள் அடிப்படை வாழ்க்கை நெறியை உணராதவர்கள் என்பது எனது கருத்து. இறுதியில் இவர்கள் இருப்பதையும் இழந்தவர்களாக தாங்கள் வாழ்க்கையை ஏமாற்றத்துடன் சந்திக்க நேரிடும்.

தற்போதைய அமெரிக்க அரசாங்கத்தின் நிலைப்பாடு தமிழ் தேசியக்கூட்டமைப்பிற்கோ அல்லது புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் தலைவர்களுக்கோ ஏற்றதானதல்ல. இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்னவென்றால் தமிழ் தலைவர்கள் மீண்டும் அன்னிய நாடுகளால் பயன்படுத்தப்பட்டுள்ளார்கள். ஆகையால் மக்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் தமிழ் தலைவர்கள் மேற்குலக, இந்திய, சிங்கள தலைவர்களைப் போன்று புத்திசாலிகள் அல்ல. இவர்களின் தராதரத்திற்கு சுயஆட்சியை நினைத்துக்கூட பார்க்க மாட்டார்கள் இலங்கையில் உள்ள அரசியல் நிபுணர்கள். இவ்வாறான சுழல் தமிழருக்கு எந்தவொரு பலனையோ முன்னேற்றத்தையோ தரமாட்டாது. ஆகையால் எமது ஒருமைப்பாட்டை கட்டி எழுப்புவதும் புத்திசாதுர்யமான அரசியல் தலைவர்களை உருவாக்கவதும் மிகவும் முக்கியமானது. இலங்கை கேந்திரமுக்கியத்தவம் வாய்ந்த இந்து சமுத்திரத்தில் இருந்தும் கூட எமது தலைவர்களால் இதை பயன்படுத்த முடியவில்லை. ஏனெனில் தமிழ் தலைவர்கள் அரசியல் தந்திரமற்ற ஆனால் சுயநலம், சமயம், மொழி, சாதி வேறுபாடு களை கொண்ட ஒரு குறுகிய நோக்கம் கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள். பரிநாம வளர்ச்சி அதிகாரபகிர்வுக்கு வழிவகுக்கும். ஆனால் நான் பரிநாம வளர்ச்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் தலைவர்களிடம் காணவில்லை.

இளைய சமுதாயம் இத்தகைய தலைவர்களை இணங்காண வேண்டும். குறிப்பாக கூறப்போனால் யாழ்பாண பல்கலைகழக அரசியல் அறிவியல் தலைமைப்பீட தலைவர் கள் உடனடியாக நீக்கப்பட்டு புதிய தலைவர்கள் நியமிக்கப்பட வேண்டும். அத்தோடு இளைய சமுதாயம் அரசியல் அறிவியல்துறையில் கல்வி பயில நாம் அவர்களை ஊக்கு விக்க வேண்டும். அத்தோடு மட்டும் நின்றுவிடாது அவர்கள் அரசியலில் ஈடுபடுவதை ஊக்குவித்து இதனூடாக ஆளுமைமிக்க சமுதாயத்தை கட்டி எழுப்ப வேண்டும்.

## 2017 பல்டி வீரன் பா உ எஸ் சிறிதரன்



ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையயை இலங்கைக்கு வழங்கக் கோரிய இலங்கை அரசின் அணியுடன் பா உ எஸ் சிறிதரன்

ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்க வேண்டும் என்று ஆதரவு தேடி ஐரோப்பிய பாராளுமன்றம் சென்ற இலங்கைப் பா உ எஸ் சிறிதரன் நாடு திருமபியதும் கிளிநொச்சியில் மே !இல் நடைபெற்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் மே தின ஊர்வலத்தில் கலந்துகொண்டு "தமிழ் மக்களுடைய கண்ணீருக்கும், கவலைகளுக்கும் இந்த அரசாங்கம் பதில் கூற வேண்டும்" என்று முழங்கி உள்ளார்.

அரசுக்கு ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகைக்கு ஆதரவு தேடிக்கொடுத்துவிட்டு நாடு திரும்பிய அவர் கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நடாத்தும் போராட்ட இடத்திற்குச் சென்று சிறிது நேரத்தை செலவழித்துள்ளார். அங்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடன் உரையாடிய போது தான் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கோரிக்கைகளை ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கு தெரியப்படுத்தவே அங்கு சென்றதாக தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• விஜயக்குமார்

# பிரேமானந்தாவும் இயேசுவைப் போல் ஒரு தீர்க்கதரிசி தான்

## அய்யா விக்கினேஸ்வரனின் தீர்ப்பு

தினப்புயல் என்ற ஊடகத்திற்கு அளித்த நேர்காணல் ஒன்றில் வடமாகாண சபையின் முதல் அமைச்சரும், ஓய்வு பெற்ற நீதிபதியுமான விக்கினேஸ்வரன் அவர்களிடம் "கொலை மற்றும் பாலியல் வன்முறை செய்ததற்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக தண்டனை வழங்கப்பட்ட பிரேமானந்தாவின் சீடராக இருக்கிறீர்களே" என்ற கேள்வி எழுப்பப் பட்டது. அய்யா அசராமல் மறுமொழி சொன்னார். "இரண்டாயிரம் வருடங்களிற்கு முன் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்ட இயேசுநாதரை இப்போது மக்கள் கடவுளாக பார்க்கிறார்கள்". "அவர் ஒரு குற்றவாளி". "அவர் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்". "ஏன் இன்று அவரை கிறீஸ்தவர்கள் இறைவனாகப் பார்க்கிறார்கள்". "அது மாதிரி பிரேமானந்தா மீதான குற்றச்சாட்டுக்களின் உண்மை தெரிந்த பின்பு பிரேமானந்தாவும் ஒரு ஆன்மீகத் தலைவராக வணங்கப்படுவார்" என்று அய்யா விக்கினேஸ்வரன் அருள் வாக்கு சொல்கிறார்.

நாங்கள் மதநம்பிக்கை அற்றவர்கள். "மதம் மக்களின் அபின்" அதாவது மனிதர்களின் பிரச்சனைகளிற்கு தீர்வை கடவுள் தருவார் என்ற பொய்யை, போதையை கொடுப்பது தான் மதம் என்ற தாடிக்கிழவன் மார்க்சின் வழி நிற்பவர்கள். மதங்கள் மனிதர்களால் உருவாக்கப்பட்ட கட்டுக்கதைகள். மதங்கள் ஆதாரங்கள் எதுவும் இல்லாத புராணங்கள். இந்த அடிப்படையிலேயே இயேசு கிறிஸ்து என்று சொல்லப்படுகிற ஒரு மனிதனின் கதையைப் பார்க்கிறோம். இந்தக் கதைகளின் படி இயேசு கிறிஸ்து அன்பைப் போதித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன். "உன்னைப் போல் பிறரையும் நேசி" என்று சொன்ன மனிதாபிமானி. பாலியல் தொழில் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட மரியா மக்தலேனாவை இயேசுவிடம் கொண்டுவந்து "இவளுக்கு நீர் என்ன தீர்ப்பளிக்கிறீர்?" என்று கேட்டபோது, இயேசு கிறிஸ்து அவர்களிடம், "உங்களில் பாவம் செய்யாதவர் எவரோ அவர் முதலில் இப்பெண்ணின் மீது கல் எறியட்டும்" என்ற மிகச் சிறந்த தீர்ப்பைச் சொன்ன நியாயவாதி. (யோவான் எட்டாம் அதிகாரம்)



இயேசு கிறிஸ்து தன்னை "தேவ குமாரன்", யூதர்களின் மீட்பர் (மெசயா) என்று கூறிக் கொண்டதற்காகவும் ஜெருசலம் பெரிய கோவிலின் நிர்வாகிகளை விமர்சித்ததற்காகவும் யூதாயாவின் ரோமா ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து பிரச்சாரம் செய்ததற்காகவும் ரோம ஆட்சியின் ஆளுனர் பொன்டியஸ் பிலாத்து முன் நிறுத்தப்பட்டு விசாரணையின் பின் மரண தண்டனை அளிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார் என கொஸ்பல்கள் எனப்படும் ஆகமங்கள் கதைகள் சொல்கின்றன.

இயேசு கொலைகள் செய்தார் என்று அவரது எதிரிகள் சொன்னதாக கதைகள் எதுவும் இல்லை. இயேசு பாலியல் வன்முறை செய்த குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டார் என்று கதைகள் எதுவும் இல்லை. அவர் அரசியல்வாதிகள், பணக்காரர்களுடன் கூட்டு வைத்துக் கொண்டு அடியாட்களை கூட வைத்துக் கொண்டு ஆசிரமம் அமைத்து அளவில்லா சொத்துக்கள் சேர்த்ததாக கதைகள் எதுவும் இல்லை. கலிலி கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த பீற்றர் (இராயப்பர் அல்லது பேதுரு), அன்ட்ரூ ( அந்திரேயா) என்னும் இரு சகோதரர்களான கடல் தொழிலாளர்கள் தான் அவரது முதல் சீடர்களாக இருந்ததாகவே கதைகள் சொல்கின்றன.

இயேசுவைப் பற்றிய கதைகள் இப்படி இருக்க கொலைகள், பாலியல் வன்முறை, கணக்கு காட்ட முடியாத சொத்துக்கள் வைத்திருந்தது போன்ற குற்றங்களிற்காக இரட்டை ஆயுள்தண்டனை பெற்ற பிரேமானந்தாவைப் போன்றதொரு குற்றவாளி தான் இயேசு கிறிஸ்துவும் என்று ஒரு முதலைச்சர், ஓய்வு பெற்ற நீதிபதி சொல்கிறார் என்றால் எந்தச் சுவரில் போய் முட்டுவது? நல்ல காலம், பிரேமானந்தாவும் உயிர்த்தெழுந்து வருவார் என்று அய்யா விக்கினேஸ்வரன் சொல்லாமல் விட்ட அளவில் தப்பித்தோம்.

விக்கினேஸ்வரன் வடமாகாண சபையின் முதலமைச்சர். அவர் வட மாகாணத்தில் இருக்கும் எல்லா மதத்தினரிற்கும், மதமற்றவர்களிற்குமான முதலமைச்சர். எல்லோருக்குமான பொது நிர்வாகி. ஆனால் அவர் எப்படிக் காட்சி தருகிறார்? திருநீறும், குங்குமமும் அள்ளிப் பூசிக் கொண்டு திரிகிறார். சைவ சமயப் பிரச்சாரம் செய்கிறார். மதத்தையும், மதச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னங்களையும் விக்கினேஸ்வரன் என்ற தனி மனிதர் தன்னுடைய தனிப்பட்ட நேரங்களில் கடைப்பிடிக்கலாமே தவிர வடமாகாண சபையின் முதலமைச்சர் தன்னுடைய அலுவலக நேரங்களில் பதவிப்பொறுப்பில் இருக்கும் போது ஒரு மதத்தைச் சேர்ந்தவராக அடையாளம் காட்டுவதும் பேசுவதும் மிகத் தவறானது.

காணாமல் போனவர்களின் குடும்பங்களிற்கு நியாயங்கள் கிடைக்கவில்லை. அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. இலங்கை அரசினால் களவெடுக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலங்கள் மக்களிற்கு திருப்பிக் கொடுக்கப்படவில்லை. வடக்கிலும், கிழக்கிலும் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் ஐம்பது நாட்களிற்கு மேலாக போராடிக் கொண்டிருக்கிறார்கள். வடமாகாண சபையின் நிர்வாகப் பொறுப்பை வைத்திருக்கும் முதலமைச்சர் விக்கினேஸ்வரனும் அவர் சார்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமது நிர்வாகத்தைப் பயன்படுத்தி எம் மக்களிற்கு செய்யக் கூடிய தீர்வுகளைச் செய்வதும் இல்லை. அரசியல் போராட்டங்களை முன்னெடுத்து உரிமைகளிற்காக போராடுவதும் இல்லை என்பது மட்டுமல்லாது மக்கள் போராடும் இடங்களை எட்டிப் பார்ப்பது கூடக் கிடையாது என்பது தான் கசப்பான உண்மை.

பாடப்படிப்பு படித்தவர்கள் அறிஞர்கள், ஆல் இன் அழகுராசாக்கள் என்னும் முட்டாள்தனங்கள் தமிழ்ச் சமுகத்தில் இருக்கும் வரை விக்கினேஸ்வரன் போன்றவர்கள் தலைவர்களாக, ஐடியா மணிகளாக வலம் வரும் கொடுமை தொடரத் தான் போகிறது. தமிழ்ச் சமுகத்திற்காக போராடியவர்கள் சமுகத் தொண்டு செய்தவர்கள் அரசியல், சமுக விஞ்ஞானிகள் என்று எத்தனையோ பேர் இருக்கும் போது தானும், தன் நீதிபதி பதவியாகவும் இருந்து விட்டு வேலையில் ஓய்வு பெற்றவுடன் அரசியல் செய்ய வெளிக்கிட்ட இவரைப் போன்றவர்களை நமது தலைவர்களாக தேர்ந்தெடுக்கும் அறிவீனங்களை இனியாவது நிறுத்துவோம். மக்களிற்காக தன்னலம் மறந்து போராடுபவர்களை முன் நிறுத்துவோம்.

## புங்குடுதீவு மாணவி கொலை வழக்கு விசாரணைகள் ரயலட் பார் " முன்னிலையில் ஆரம்பம்



வடமாகணத்தில் முதலாவது " ரயலட் பார் " தீர்ப்பாய முறைமையிலான நீதிமன்ற அமர்வு திங்கட்கிழமை யாழ்.மேல் நீதிமன்றில் நடைபெற்றது. புங்குடுதீவு மாணவி கொலை வழக்கு " ரயலட் பார் தீர்ப்பாய முறைமையில் மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் நடைபெற்றது அதற்காக பிரதம நீதியரசரால் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலசிங்கம் சசிமகேந்திரன் தலைமையில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் இளஞ்செழியன் மற்றும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் ஆகியோர் கடந்த வாரம் பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

அதன் போது எதிர்வரும் 12 ஆம் திகதி மாணவி கொலை வழக்கின் ஒன்பது எதிரிகளையும் யாழ்.மேல் நீதிமன்றில் முற்படுத்துமாறு அனுராதபுர சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவு இட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தேசியமும் எதிர்காலமும்

>> ரகுமான் ஜான்

பகுதி 2 (சென்ற இதழ் தொடர்ச்சி).

ஐயர் எழுதிய "ஈழப்போராட்டத்தில் எனது பதிவுகள்" என்று நூல் புலிகளது போராட்டத்தின் ஆரம்ப காலகட்டத்தை குறிக்கிறது என்றால், தமிழினி எழுதிய "ஒரு கூர்வாளின் நிழலில்" நூல் புலிகளது இறுதிக்காலகட்டங்களை காட்டுகிறது. ஆதலால் இந்த சமயந்தில் நாம் இந்த இரண்டு நூல்களையும் இணைத்துப் பார்ப்பதும் அவசியமானதாக இருக்கிறது. ஐயர் தனது நூலில் குறிப்பிட்டவாறு, புலிகள் அமைப்பினுள் ஆரம்ப காலத்தில் முட்டி மோதிய முரண்பாடுகள், அவற்றின் தர்க்கரீதியான வளர்ச்சியின் ஊடாக முள்ளிவாய்க்காலில் வந்து முடிந்திருப்பதை நாம் இங்கு பார்கக்க் கூடியதாக இருக்கிறது. புலிகள் இயக்கம் தொடங்கிய காலத்தில், தன்னியல்பாக போராட்டத்தில் குதித்த இளைஞர்கள் என்றவகையில் எல்லா விடயங்களுமே மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட விதத்திலேயே புரிந்துகொள்ளப் பட்டிருந்தன என்பது கண்கூடான விடயமாகும். தமிழீழம் இறுதி முடிவு: ஆயுதப் போராட்டத்தினால் அதனை அடையவது: தமிழீழம் கிடைத்த பிறகு தமது அமைப்பை கலைத்து விடுவது: போதைப்பெருள் தடை: காதல், திருமணம் கிடையாது: இயக்கத்தை விட்டு விலகிப் போனால் பிறகு அரசியல் செய்ய முடியாது.

வெறும் உணர்ச்சிமயப்பட்ட, அரசியல்ரீதியில் அறவே முதிர்ச்சியற்ற, பதின்ம வயதில் இருக்கும் இளைஞர்களது மனோரதியமான (romanticised) நிலைப்பாடுகள்தாம் இவை எப்பதை புரிந்துகொள்வதில் இப்போது எமக்கு எந்தவிதமான பிரச்சனையும் இருக்காது. வரலாறானது இந்த அப்பாவித்தனங்களை ஈவிரக்கம் இல்லாமல் கலைந்து எறிகிறது. புலிகளது ஆரம்ப நிலைப்பாடுகள் ஒவ்வொன்றுமே அடுத்தடுத்து கேள்விக்குள்ளா கின்றன. போராளிகள் முன்னே போராட்டானது முன்வைக்கும் கேள்விகள்: அவற்றிற்கான விடைகளை தேடுவதற்காக போராளிகள் எடுக்கும் எத்தனிப்புகள்: இந்த தேடுதலில் நடைபெறும் வாசிப்புகள், உரையாடல்கள், விவாதங்கள் போன்றவை ஆரம்ப நிலையிலான அப்பாவித்தனங்களை அலங்கோலமாக கிழித்தெறிகின்றது. அதற்கு பின்னால் போராட்டத்தில் நிலைத்திருந்த அனைவருமே, புலிகள் ஆரம்ப காலத்தில் முன்வைத்திருந்த நிலைப்பாடுகளை மீறியே தமது வாழ்க்கையை, போராட்டத்தை, அமைப்பை முன்னெடுத்தார்கள். அதே நிலைப்பாடுகளை முரணில்லாமல் இன்றுவரையில் முன்னெடுத்திருந்தால், புலிகள் அமைப்பின் தலைமை உட்பட, அந்த அமைப்பில் இருந்த வந்த அனைவருமே துரோகிகளாக வரலாற்றின் குப்பைகூலத்தில் எறியப்பட்டிருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகள் அமைப்பில் மாத்திரம்தான் இப்படிப்பட்ட பிரச்சனைகள் இருந்தன என்றோ, தனிப்பட அந்த அமைப்பின் தலைமை மாத்திரமே இப்படிப்பட்ட எல்லா பிரச்சனைகளுக்கும் காரணம் என்றோ விமர்சிப்பது அரசியல்ரீதியில் அயோக்கியத் தனமானது என்றேபடுகிறது. புலிகள் அமைப்பு மாத்திரமன்றி, எமது போராட்டத்தில் தோன்றிய பல்வேறு அமைப்புகளிலும் நிலைமைகள் கிட்டத்தட்ட இப்படியேதான இருந்தன. காரணம் இந்த அமைப்புகள் யாவுமே எமது சமுதாயத்தின் படைப்புகள் என்றவகையில் ஒன்றுக்கொன்று ஒத்தவையாகத்தான் இருந்தன. எங்கெல்லாம் புரட்சிகர மான கோட்பாட்டின் ஊடாக நாம் சமுதாயத்தின் குறுகிய வரையறைகளை தாண்டிவர தவறுகிறோமா, எங்கெல்லாம் தன்னியல்பாக போராட்டமானது முன்னெடுக்கப்படு கின்றனவோ, அங்கெல்லாம் எமது சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் சித்தாந்த தங்கள் மீண்டும் மீண்டும் தம்மை நிலைநிறுத்திக்கொள்வதை நாம் காண முடிகிறது.

எமது சமுதாயம் எவ்வாறு இயங்குகிறது என்று பார்ப்போம். எமது கல்வியின் நோக்கமே, தனிமனிதர்கள் அதன் மூலமாக எவ்வாறு அதிகம் பொருளீட்டக்கூடிய விதத்தில் முன்னேறலாம் என்பதாகவே இருக்கிறது. மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளை நோக்கி நாம் படையெடுக்கிறோம். இப்படிப்பட்ட போட்டியில் வெற்றிபெறாதவரை எமது சமூகத்தில் நாம் தோற்றுப்போனவர்களாக காண்கிறோம். எட்டாம் வகுப்பிலேயே 'புத்திசாலிகள் என்று நாம் கருதும் அனைவரையும் கணிதம், விஞ்ஞான துறைகளுக்கு அனுப்பப்பட்டுவிடுகிறார்கள். இதில் தேறாதவர்கள் வர்த்தக துறைக்கும், இவை எதுக் குமே தேர்வாகாதவர்களை 'கலைப்பிரிவு என்ற பெயரில் சமூக விஞ்ஞான துறைக்கு கழித்துவிடுகிறோம். ஒரு சமுதாயம் தனது வளங்களை எங்கு செலுத்து கிறதோ, அத னையே அறுவடை செய்கிறது. இப்படியாக சமுதாய அளவில் நாம் ஒரு குறிப்பிட்ட விதத்தில் வளங்களை ஒதுக்கிவிட்டு, அரசியல் இயக்கங்களில் பெரிய அளவில் எதிர்பார்ப்பது தவறான செயற்பாடு அல்லவா?

இவ்வாறு கூறுவதனால், விடுதலை போராட்ட இயக்கங்களின் பொறுப்பை நாம் குறைத்து கூற முடியாது. நாங்கள் போராளிகள் என்று வரும் போது எங்களுக்கு பொறுப்பிருக்கின்றது. எம்மிடம் ஒரு தெளிவான பார்வை தரிசனம் (எளைழைெ) இருக்க வேண்டும். அதிலிருந்து பிறந்த ஒரு திட்டவட்டமான "அரசியல் திட்டம்", "மூலோபாயம் - தந்திரோபாயம்" என்பவை வகுக்கப்பட்டிருக்க வேண்டும். இவை எனது போராட்டத்திற்கு திட்டவட்டமான வழிகாட்டியாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால் விடயங்கள் இப்படியான கண்ணோட்டத்துடன், ஆழமான பார்வையுடன் அணுகப்படவில்லை. விடயங்கள் வெறுமனே "அனுபனமான" மட்டத்தில் புரிந்து கொள்ளப்படுகிறது. இப்படியான அனுபவவாத மட்டத்திலான புரிதலில் எல்லாமே இலகுவானவையாக இருக்கின்றன. கண்ணுக்கு முன்னேயுள்ள எதிரிகள் இலகுவாக இனங்காணப்பட்டு அழித்தொழிக்கப்படுகிறார்கள். சிறீலங்கா அரசுடன் ஒத்துழைப்ப வர்களை துரோகிகள் என்று, தமிழ் அரசியல் தலைமை கை காட்ட, அவர்களை அழித் தொழிப்பதே போராட்டமாக கருதப்படுகிறது. அடுத்துவரும் பொலிஸ் உள்வாளி கள், காட்டிக் கொடுப்பவர்கள் என்று இந்த இலக்கு விரிகிறது. பொலிஸ் தேடி, தலைமறைவு வாழ்க்கை வாழநேரும்போது, அதற்காகவும், ஆயுதங்களை வாங்குவதற்காகவும் வங்கி கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. இப்படியாக போராட்டம் தன்னியல்பாகவே விரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கிறது. விடயங்கள் இவ்வளவு இலகுவாகவும், நேரடியாகவும் இருக்கும் என்றால் பின்னர் எதற்காம் கோட்பாடும் மண்ணாங்கட்டியும் என்று கேட்கத்தோன்றுகிறது. இந்த இடத்தில் நாம் மார்க்ஸ் குறிப்பிட்ட உண்மைகள் வெளிப்படையாகவே தெரியவருமானால் பின்னர் சமூக விஞ்ஞானிகள் எதற்கு? என்ற வாசகத்தை கவனிக்க தவறக் கூடாது. அவ்வாறே, புரட்சிகர கோட்பாடு இன்றி, ஒரு புரட்சிகர கட்சி இல்லை என்று குறிப்பிட்டதையும் மறக்கக் கூடாது.

எமது போராட்டத்தில் தோன்றிய எந்தவொரு இயக்கத்திடமும் முறையான கோட்பாடோ, அல்லது கோட்பாட்டின் தேவை பற்றிய புரிதலோ இருக்கவில்லை. ஈரோஸ், ஈபிஆர்எல்எவ் போன்றவையும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. வேண்டுமானால் என்எல்எவ்டி அமைப்பை மாத்திரம் சற்று புறநடையாக கொள்ளலாம். அனைவரிடமும் இருந்ததெல்லாம் தமிழ் தரகு முதலாளிய வர்க்கத்தின் கைகளில இருந்து தமிழ் தேசியவாதம் உருவாக்கியிருந்த சிங்களக் காடையர் எதிர் அப்பாவித் தமிழர் என்ற மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட, உணர்ச்சிமயமான சுலோகங்கள் மட்டும்தான். இவற்றுடன் அந்த காலத்தில் நிலவிய குறிப்பான சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு ஆயுத போராட்டம், தலைமறைவு இயக்கம் என்பவற்றையும் சேர்த்துக் கொண்டார்கள். சிங்களவர்கள் அடிக்கிறார்கள், கொல்கிறார்கள், பாலியல் வல்லுறவு செய்கிறார்கள் என்ற பாணியில் உணர்ச்சிமயமான முன்னெடுக்கப்படுகிறது. இந்த உணர்ச்சிமயமான போராட்டமானது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பயனளிப்பதாக தோன்றலாம். இந்த உணர்ச்சி மயமான அணுகுமுறையானது ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் அதன் வலுவை இழந்துவிடுகிறது. அத்தோடு, இந்த உணர்ச்சிநிலை ஆனது போராட்டம் குறித்த அறிவார்ந்த மதிப்பீடுகளை, விமர்சனம் - சுயவிமர்சனம் என்பவற்றிற்கு எல்லாம் இடங்களை வழங்காதமையினால், போராட்டத்தின் உண்மையான வளர்ச்சிக்கு தடைக்கல்லாகி விடுகின்றன.

இதற்கு மாறாக, பிரக்ஞைபூர்மவான செயற்பாடு என்பது, முதலிலேயே எமது சமூக சூழலை பகுப்பாய்வு செய்து எமது நாம் யார்? எமது எதிரி யார்? என்ற கேள்விகளுக்கான விடைகளை கண்டடைவதுடன் தொடங்குகிறது. எமது நண்பர்கள் யார்? எதிரியின் நண்பர்கள் யார்? எம்முடன் தற்காலிகமாகவாவது வரக்கூடிய சக்திகள் எவை? எதிரியுடன் தற்காலிகமாகவாவது சேர்ந்து செயற்படக்கூடிய சக்திகள் யார்? என்றெல்லாம், போராட்டத்தின் திட்டமிடுதல் கட்டத்திலேயே வரையறுத்துக் கொள் கிறது.

இதனால் போராட்டத்தின் ஆரம்ப காலம் முதலாக நாம் எவ்வாறு எமது தரப்பை பலப்படுத்துவது? எதிரியின் தரப்பை எவ்வாறு பலவீனப்படுத்துவது என்பதில் கவனம் குவிக்கப்படுகிறது. இந்த அக்கறையில் ஒரு ஊசலாட்டமுள்ள சக்தியைக்கூட எவ்வாறு வென்றெடுப்பது என்பதும், எதிரிக்கு சாதகமான சக்திகளிடையே எவ்வாற முரண்பாடுகளை தீவிரப்படுத்துவது என்பது குறித்தம் எனமது அக்கறைகள் இருந்தாக வேண்டியிருக்கிறது. எமது தரப்பை, எமக்கு சாதகமாக எல்லா சக்திகளுடனும் - நண்பர் கள், தற்காலிக சக பயணிகள், ஊசலாடும் சக்திகள் - பலமாக ஐக்கியப்படுத்துவது என்பதிலும், எதிரிகளை எவ்வாறு அவனுக்கு சாதகமாக உருவாகக்கூடிய அணிதிரளலில் இருந்து தனிமைப்படுத்துவது என்பது முதன்மையான அக்கறையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாக வேண்டும்.

ஆனால் இப்படிப்பட்ட ஒரு கேந்திரமான பார்வை இல்லாததனால், நாம் எமது முகாமிற்குள் இருந்த பகைமையற்ற முரண்பாடுகளை பகைமையாக்கினோம். அவர்கள் மீது அழித்தொழிப்பில் தொடங்கிய தாக்குதல்கள், அந்த சக்திகளை எதிரியின் அணிக்கு சேர்த்துவைக்கும் பணியை ஆற்றியது. இறுதியில் இந்த கேந்திரமற்ற பார்வையானது புலிகள் அமைப்பை எல்லா தரப்பினரிடம் இருந்து அந்நியப்படுத்தவும், சிறீலங்கா அரசு எல்லா சக்திகளையும் தனக்கு சார்பாக அணிதிரட்டவுமான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது. இதனால் நாங்கள் கடைசியில் தனித்துப் போய் நிக்கிறம். ஒருவரும் உதவி செய்யவில்லை என்றால், அது ஏன், எவ்வாறு நடந்துமுடிந்தது என்ற கேள்விக்கும் நாம் விடைகண்டாக வேண்டும் அலலவா?

அடுத்ததாக, எமக்கு வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரம் குறித்து தெளிவான பார்வை கிடையாது. முதலாளித்துவத்திற்கு முந்திய காலத்தில் தனிநபர்களே, மாவீரர்கள், மன்னர்கள், மேதைகள் தமது தனித்திறமையினால் வரலாற்றை படைப்பதான ஒரு கருத்து நிலவி வந்தது. ஆனால் முதலாளித்துவ புரட்சியுடன் மக்கள் திரள் அமைப்புகள் பல்வேறு சமூக மாற்றங்களிலும் ஆற்றும் தீர்க்கமான பாத்திரம் குறித்த கருத்தானது மிகவும் பரவலாகியுள்ளது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு ஜனநாயக கருத்தியல் சூழலைக் கூட எமது தமிழ் சமுதாயம் அடையாமல் இருக்கிறது எனபதுதான் இன்றைவரையில் உள்ள நிலைமை. வீட்டில் பெற்றோர் எமது கல்வி, வேலைத் தெரிவு, திருமணம் வரையில் தீர்மானிக்கிறார்கள். உனக்கு என்ன நல்லது என்று எனக்குத் தெரியும் என்பது எமது குடும்ப நடைமுறையில் நாம் அன்றாடம் கேட்கும் ஒரு வாசகமாகும். இதே நடைமுறைகள் அமைப்பினுள்ளும் வருகிறது. இங்கே அம்மா, அப்பாவின் இடத்தில் ஒரு தலைவர் அமர்ந்துவிடுவது எமக்கு ஆச்சரியத்தையோ, அதிர்ச்சியையே தருவதில்லை. லெனின் சொல்வதுபோல, *ஒருவர் பின் ஒருவராக தலைமை தாங்கும் தொடர்ச்சியான ஒரு தலைமைப் பீடத்தை உருவாக்க* வேண்டும் என்ற அக்கறைக்குப் பதிலாக தனிமனித தலைமைகளை உருவாக்கி, அவற்றை நோக்கி விம்பங்களை கட்டமைப்பது தொடர்கிறது. கொள்கை, அமைப்பு என்பவற்றிற்கு மேலாக தனிநபராக உள்ள தலைவர் மீது நிபந்தனையற்ற விசுவாசத்தை கொண்டிருப்பதே முதன்மைப்படுத்தப்படுகிறது.

மனிதர் தாம் விரும்பும் அம்சங்களை எல்லையில்லா அளவிற்கு விரித்துவிட்டு அவற்றை கடவுள் என்று அழைக்கின்றனர். எங்கும் நிறைந்த, எல்லாம் அறிந்த, சர்வ வல்லமை படைத்த இந்த கடவுள்களே, இன்னொரு கட்டத்தில் எமது எதிர்பார்ப்பை நிறைவு செய்ய முடியாதவர்களாக எமக்கு தோன்றத் தொடங்குகிறார்கள். தவறு செய்து தண்டிக்கப்பட்ட கடவுள்கள் எல்லாம் எமது புராணங்களில் காணப்படுகிறார்கள். *"நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே"* என்று அதே கடவுளர்களையே கேள்வி கேட்கும் நிலைமையும் அதே புராணங்களில் காணப்படுகின்றன. நாமே உருவாக்கிய, நாம் விரும்பும் நற்பண்புகளுக்கு எல்லாம் முடிவிலா அளவிற்கு நீட்டி உருவாக்கிய கடவுளரது நிலைமையே இதுவானால், மனிதர்களது நிலைமை பற்றி நாம் பேசவே வேண்டியதில்லை. மனிதரது புலன் சாதனங்களும், அவரது மூளையுமே குறிப்பிட்டஅளவிலேயே புற உலகு பற்றிய தகவல்களை பெற்று, பரிசீலனை செய்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் இயக்கப் போக்கை தீர்மானிக்கும் வல்லமை படைத்தவையாகும். இதனால் குறிப்பிட்ட ஒரு தருணத்தில் மனிதர் பெரும் அறிவானது எப்போதும் பற்றாக்குறை உடையதாக இருப்பதும், இதனால் அடிக்கடி அவர்கள் தவறு செய்வதும், அவற்றிலிருந்து படிப்பினைகள் பெற்று மீண்டு வருவதும் மனித குலத்திற்கே உரிய பண்பாகும். இங்கு தவறே செய்யாத மனிதரோ, அல்லது விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட நபர்களோ அல்லது அமைப்புகளோ இருக்க முடியாது என்பதுதான் வரலாற்றுபூர்வமான உண்மையாகும்.

புலிகளை விமர்சிப்பவர்கள், புலிகளின் தலைவர் *"படு முட்டாள்"* எனவும், அவரது முட்டாள் தனத்தாலேயே அனைத்து தவறுகளும் நேர்ந்ததாகவும் விமர்சிக்கின்றனர். இது ஒரு அப்பட்டமான தவறான விமர்சனம் என்பதை தொடக்கத்திலேயே நாம் நிராகரித்து ஆகவேண்டும். எமது சமுதாயத்தின் சாராசரிக்கும் அதிகமான அறிவுமட்டம் இல்லாத ஒருவரால் முப்பத்து ஐந்து வருடம் மாத்திரமல்ல, முப்பத்து ஐந்து நாட்கள் கூட இந்த போராட்டத்தில் தலைமை சக்தியாக இருந்திருக்க முடியாது என்பது வெளிப்படையான உண்மையாகும். ஆனால் இங்கு எங்கு பிரச்சனை எழுகிறது என்றால், புலிகள் அமைப்பின் தலைவர் மீது கட்டப்படும் விம்பம் தொடர்பாகவே எமது விமர்சனங்கள். இந்த விம்ப அரசியலானது, ஒரு போராட்ட அமைப்பினுள் பரஸ்பரம் காணப்பட வேண்டிய விமர்சனம், மதிப்பீடுகள், சுயவிமர்சனம் போன்ற, போராட்ட அமைப்பின் முறையான செயற்பாட்டிற்கு அவசியமான செயற்பாடுகளை முடக்கி விடுகிறத. இதற்கு மேல் அந்த அமைப்பானது அதன் ஆன்மாவை இழந்துவிடுகிறது.

தனிநபர்கள் குறித்து எப்படிப்பட்ட பிரமிக்கத்தக்க விம்பங்கள் வெளியில் உருவாக்கப் பட்டிருந்தாலும், அவருடன் தொடர்ச்சியாக செயற்படும் தோழர்களுக்கு அவருடைய பலவீனங்களும், குறைபாடுகளும் தெரிந்தே இருக்கின்றன. இந்த நிலையில் சரி தவறு என்பதற்கு அப்பாற்பட்டு குறிப்பிட்ட தலைவருக்கு முற்று முழுதான விசுவாசம் என்பது ஒருவகையில் அமைப்பினுள் உள்ள முன்னணி உறுப்பினர்களிடையிலான உறவுகளையே களங்கம் கொள்ள அல்லது ஊழல் படியச் செய்வதாகவே (corrupt பண்ணச் செய்வதாகவே) அர்த்தப்படும். இது தவிர்க்க முடியாதபடியாக, அடுத்த மட்ட தலைவர்கள், தத்தமது பிரதேசங்களில் குறுநில மன்னர்கள் போல செயற்படுவதும். அவருக்கு நெருக்கமானவர்கள், அமைப்பு விதிகளை மீறி செயற்படுவதும் என ஒரு தொடர்கதையாகவே இந்த ஊழல் தொடர்கிறது. பல்வேறு நபர்களும் இதனை தனிப்பட்ட ஒரு குறிப்பிட்ட தலைவரது தவறாகவே வெளியில் விமர்சிக்கிறார்கள். ஆனால் இதன் ஊற்று மூலம் இந்த தனிநபர் விசுவாசமேயாகும். கொள்கைரீதியான சரி தவறுகளைப் பற்றி கவலைப் படாமல் கண்மூடித்தனமான விசுவாசத்தை கோரும்போது அதற்காக கொடுக்கும் விலைதான் இந்த ஊழலாகும். கிட்டு, மாத்தையா, கருணா, சொர்ணம் ... என்று இந்த பட்டியல் மிகவும் நீண்டது. இதற்கு விதிவிலக்கான நபர்களும் இருந்தார்கள் என்பதை இரு மறுப்பதாகாது.

தலைமைக்கு முழு விசுவாசமாக இருப்பது முன்னிபந்தனை என்றான பின்னர், அமைப்பில், போராட்டத்தில், மக்களுடனான உறவுகளில் ஏற்படும் சிக்கல்களை, அவற்றில் அமைப்பின் தவறுகளை விமர்சிப்பது, கேள்வி கேட்பது என்பவை தலைமை மீதான விசுவாசமின்மையின் வெளிப்பாடாக எடுத்துக் கொள்ளப்பட்டு தொடர்ச்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை அங்கத்தவர்கள், முதன் மட்டத்தில் சிலரும், அடுத்தடுத்த மட்டங்களில் பலரும் தொடர்ச்சியாக களையெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு இவர்கள் கொடுக்கும் விளக்கங்களை மக்களோ, வெளியில் இருக்கும் அவதானிகளோ நம்புவதில்லை என்பதுதான் இதுவரைக்குமான வரலாறு.

அமைப்பின் மீதான அக்கறையுடன் கூடிய விமர்சனங்கள், கருத்துக்கள், கேள்விகள் கேட்பது தடுக்கப்படும் பொழுது, இதன் எதிர்வினையாக வஞ்சகப் புகழ்ச்சிகள் அந்த இடத்தை எடுத்துக்கொள்ளத் தொடங்குகின்றன. கசப்பான உண்மைகளை சகித்துக் கொள்ளாதபோது, இனிப்பான பொய்கள் மடைவெள்ளமென திறந்துவிடப்படும். எல்லா வற்றையும் போலவே இந்த பொய்களின் வெள்ளமும் ஏற்படுத்தும் போதை தலைமை உட்பட எல்லோரது கண்களையும் மறைத்துவிடக் கூடியவையாகும். பிற்காலத்தில் அமைப்பின் தோல்விகளில் இதுபோன்ற சம்பவங்களும் பாரிய பங்கை ஆற்றியுள்ளன.

அடுத்தது அரசியல் பிரச்சனைகளை பார்ப்பம். "மக்கள்தான் வரலாற்றை படைக்கின் றார்கள். ஆனால் அதை விருப்பதிற்கு ஏற்ப உருவாக்கிக் கொள்ள முடிவதில்லை. தாங்கள் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலைக்கு ஏற்றபடியா இல்லாமல், கடந்த கால வரலாறு அந்த மக்களுக்கு எவற்றை கைமாற்றிக் கொடுக்கிறதோ, அந்த சூழ்நிலைக்கு ஏற்பவே வரலாற்றை உருவாக்குகின்றனர்" என்கிறார் மார்க்ஸ். இதில் இரண்டு விடயம் முக்கியப்படுது. மக்கள், தாம் வாழ்கிற சூழ்நிலையை, அதிலுள்ள பிரச்சினைகள், நுணுக்கங்களை புரிந்துகொள்ள முடியும். அதாவது இது மக்களது தன்னிலை (subjectivity) பற்றி வலியுறுத்துகிறது. இரண்டாவது, வரலாற்றை படைக்கப் போறது மக்களது சக்திதான். இது மக்களது செயலாண்மை (agency) பற்றி பேசுகிறது. ஆகவே எந்தவொரு புரட்சிகர போராட்டமும் மக்களது இந்த தன்னிலை, செயலாண்மை என்பவற்றை முதன்மையாக கவனத்தில் கொண்டே தமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அப்படியானால் சாதாரண நிலைமையில் மக்கள் செயற்பாடற்றவர்களாகவும், அரசியல் விழிப்புணர்வு குறைந்தவர்களாகவும் இருப்பதை எவ்வாறு புரிந்துகொள்ளவது என்பதுதான் அந்த பிரச்சனையாகும்.

மேலே கூறப்பட்டது போல மக்கள் அறவே போராடதவர்களாக இல்லை. மாறாக, அங்கொண்றும், இங்கொண்றுமாக போராடவே செய்கிறார்கள். ஆனால் மிகவும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களால் அந்த போராட்டங்களில் வெற்றி பெற முடிவதில்லை. அதற்கு காரணம் அவர்கள் "வெறுங் கைகளுடன்" போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். முன்னணி போராளிகள் என்ற வகையில் எமக்கு கிடைத்த பல வரப்பிரசாதங்கள் (privileges) அவர்களுக்கு மறுக்கப்பட்டனவாக இருக்கின்றன. எமக்கு கிடைத்த கல்வி வாய்ப்புகள், எமக்கு கிடைத்த போராட்ட அனுப வங்கள், இவற்றின் மூலமாக நாம் உருவாக்கிக்கொண்ட தொடர்புகள்... போன்ற பற்பல சாதனங்கள் இந்த சாதாரண மக்களுக்கு மறுக்கப்பட்டனவாக இருக்கின்றன. இந்த சாதனங்கள் அந்த மக்களுக்கு கிடைக்குமானால், அவர்களால் சமூக சிக்கலை திறமை யாக புரிந்து கொள்ளவும், புதிய புதிய போராட்ட வடிவங்களைக் கூட அவர்களால் அறிமுகப்படுத்தவும் முடியும். இந்த நிலையில் புரட்சியாளர்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், மக்களிடம் அந்த சாதனங்களை கொண்டு செல்வது. எமது சமூக பின்னணியானது எமக்கு இயல்பாய தந்துள்ள அந்த சாதனங்களை கோட்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கத்தை, அமைப்புத்துறையை, தேவைப்பட்டால் பௌதிக கருவிகளையம் - கொண்டு சேர்த்தால், அந்த மக்கள் சுயமாகவே போராடும் வல்லமையை பெற்றுக்கொள்வார்கள். இதன் மூலமாக போராடும் அந்த மக்கள் திரளின் உண்மையான தலைமையாக - இங்கு தலைமை என்பதை கிராம்சி கூறுவதுபோல வழிநடத்தல் (direction) என்ற அர்த்தத்திலேயே நாம் புரிந்து கொள்ள வேண்டும் - நாம் இருப்பதை காணலாம். இதற்கு மாறாக, சுயாதீனமாக செயற்படும் மக்களது அனைத்து செயற்பாடுகளையும் கட்டுப்படுத்திவிட்டு, எமது தலைமையில் மாத்திரமே, நாம் சொல்லும் விதத்தில் மட்டுமே அதாவது எமது அணியில் ஆளணியை நிரப்புபவராக மாத்திரமே மக்கள் போரடலாம் என்பது பொன் முட்டையிடும் வாத்தை அறுப்பதை போன்றது.

முன்னொரு காலத்தில் அரசனை கடவுளின் வடிவமாக காண்பதும், அவனுக்கு அடிபணிவதே கடவுளுக்கு செய்யும் சேவையாக பார்ப்பதுமான கருத்துநிலையொன்று இருந்து வந்தது. இது முதலாளித்து ஜனநாயக அரசியல் சகாப்பத்திற்கு முந்திய, இன்று வழக்கொழிந்துபோன ஒரு கருத்தாகும். இதனை மீள எழுப்ப முனைவதும், மக்களை வெறும் மந்தைகளாக ஓட்ட நினைப்பதும் மிகவும் தவறான அரசியலின் வெளிப்பா டாகும். உண்மையில் மன்னாரில் இருந்து கிளிநொச்சி ஊடாக, முள்ளிவாய்க்காலுக்கு மக்களை சாய்ச்சுக்கொண்டு சென்றபோது இதுவேதான் நடந்து முடிந்தது.

அடுத்தது எமது போராட்ட வழிமுறைகள் பற்றிய பிரச்சனையாகும். எங்களது கைகளில் பத்து விரல்கள் இருக்கின்றன. அதில் ஒன்று அல்லது சில விரல்கள் சிறப்பாக செயற்ப டுவதாக நாம் கருதலாம். அதற்காக கையிலுள்ள ஏனைய விரல்கள் அனைத்தையும் மடித்து வைத்திருப்பது எத்தனை மடமையானதோ, அவ்வாறுதான் ஒரு போராட்டத்திலும் சாத்தியமான போராட்ட வழிமுறைகளில் அதிகாரப் படிநிலையை (hierarchy) கற்பிப்பதும், அவற்றில் சிலவற்றிற்கு அதீத முக்கியத்துவம் கொடுத்து ஏனையவற்றை முழுமையாக நிராகரிப்பதுமாகும். போராட்டத்திற்கு பல வழிமுறைகள் இருக்கின்றது. ஆயுதம் தாங்கிய வன்முறை போராட்டம், வன்முறையற்ற போராட்டம். பகிரங்கமானது, இரகசியமானது. மேடையில் பேசுகின்றோம் இரகசியமாக கூட்டத்தில் பேசுகின்றோம். எதிரியுடனும் நேரடியாக பேச வேண்டியிருக்கும். இதையெல்லாமே நாங்கள் கற்றுத்தேற வேண்டும். இருக்கின்ற அத்தனை சாதனங்களையும் நாங்கள் பயன்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் மிகவும் தீர்க்கமானதாக தோன்றும் ஒரு போராட்ட வடிவமானது, மாறிவிட்ட இன்னொரு சூழலில் அறவே பயனற்றதாகி விடுகிறது. இப்படிப்பட்ட நிலைமையில், அந்த நிலையையில் சிறப்பாக செயற்படக் கூடிய போராட்ட வழிமுறைகளை நாம் தேர்ந்தெடுத்து, அவற்றை மிகவும் சிறப்பாக பயன்படுத்தினால் மாத்திரமே, இப்படியாக மாறிவரும் போராட்ட சூழலில் அமைப்பின் பலமும், கட்டுப்பாடும் சிதறாமல், போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்ல முடியும்.

சமாதான காலகட்டம் என்பது புலிகள் அமைப்பைப் பொறுத்தவரையில் ஒரு சோதனையான கட்டமாக இருந்துள்ளது. எதிரியின் ஒரு பலமான தாக்குதலை முகம்கொடுக்க முடியாத நிலையிலேயே, கடைசி மோதலுக்கான முதல் தாக்குதலை புலிகளே தொடங்குகிறார்கள். கடைசி யுத்தத்தில் அணி திரட்டல் பற்றிய விடயம் பாரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையாகிறது. மக்கள்தான் போராளிகள் என்றால் நாங்கள் ஏன் அவர்களை பிடித்துக்கொண்டு வரவேண்டியிருகின்றது? அந்த மக்களுடைய போராட்டத்திற்கு நாங் கள் ஏன் அவர்களைப் பிடித்து கட்டாயப்படுத்த வேண்டும்? கடைசிக் கட்டத்தில் வன்னி யில் ஒரு மூன்று லட்சம் பேரை வைத்துக் கொண்டுதான் போராட்டத்தை நடத்தப் பார்க் கிறம். எங்கள் தேசத்திலுள்ளவற்றில் ஒரு இருபது வீதத்தையாவது கடைசி நேரத்தில் பயன்படுத்த முடிந்ததா?

ஐ.எஸ் அமைப்பிற்கு இந்த உலக நாடுகளில் இருந்தெல்லாம் ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் சுயவிருப்பத்துடன் போயச் சேர்கிறார்கள். நாம் சொந்த மண்ணில் சிறுவர்களை கடந்திச் சென்று மூன்றே நாட்கள் பயிற்சி கொடுத்து, எதிரியின் பீரங்கிக்கு தீனியாய் அனுப்புகிறோம். ஒரு வாதத்திற்காக சொல்வதானாலும், தமிழகத்தில் இருந்து, புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து, யாழ்ப்பாணத்தில் இருந்து அமைப்புடன் இணைந்து கொள்ள சுயவிருப்புடன் வருவதற்கு இளைஞர்களை தயார்படுத்தாமல் விட்டது எப்படிப் பட்ட தவறு? அதிகாரவர்க்க நடைமுறைகளை முற்றாக கைவிட்டு, இந்த போராட்டத்தை ஒரு மக்கள் போராட்டமாக நடத்தியிருந்தால், நிலைமை வேறு விதமாக அமைந்திருக்கலாமா? என்றும் யோசிகத்தாக வேண்டியுள்ளது அல்லவா?

இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் முன்னைய புலிகளின் ஆதரவாளர்கள், தலைமையின் மறைவை பகிரங்கப்படுத்தி, அதற்கான அஞ்சலியை செய்துவிட்டு, அடுத்த கட்டத்திற்கு போராட்டத்தை நகர்த்த முடியாமல், தமக்குள் பல குழுக்களாக பிரந்து முட்டி மோதிக்கொண்டு இருப்பது ஏன்? இப்படிப்பட்ட வியாபாரிகள் எல்லாம் கடந்த காலத்தில் அமைப்பினுள் எவ்வாறு வந்து சேர்ந்தார்கள்? கொள்கையுடன் இணைந்து செயற்பட்டவர்களுடன் முறையான உறவுகளை பேண முடியாதபோது, அவர்களின் இடங்களை பல வியாபாரிகளும், வஞ்சகப் புகழ்ச்சியாளர்கள் எடுத்துக் கொண்டார்கள். இதற்கு யார் காரணம்?

யுாழ்ப்பாணத்திலிருந்து மக்களை பலவந்தமாக வெளியேற்றும் போது, யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட மக்களை அரசின் கட்டுப்பாட்டு பகுதிக்கு செல்லவிடாமல் பலவந்தமாக கொண்டு சென்றபோதும், சம்பந்தப்பட்ட மக்களது உரிமை, அவர்கள் தமது எதிர்கால பாதுகாப்பு குறித்து முடிவு செய்யும் உரிமை மறுக்கப்படுகிறது. இதன் மூலமாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்புடனேயெ இருப்பதான ஒரு தோற்றம் சர்வதேச சமூகத்திற்கு காட்டப்பட்டதாக இந்த நூலில் கூறப்படுகிறது. இந்த செயற்பாடுகள் ஒரு வித நிகழ்த்திக் காட்டுதல்களைத்தான் (performance) சுட்டுகிறது. உண்மையான மக்கள் போராட்டத்திற்கு எதற்கு இத்தனை நிகழ்த்திக்காட்டல்கள்?

இறுதியாக, இந்த நூல் முழுவதுமே எமது போராட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்ட கோட்பாட்டு, அரசியல், அமைப்புத்துறை சார்ந்த தவறான நிலைப்பாடுகள் எவ்வா றெல்லாம் போராட்டத்தை மிகவும் கடுமையாக நெருக்கடிகளுக்குள் சிக்கவிட்டு, இறுதியில் முள்ளிவாய்க்காலில் முடிவுகட்டியது என்பதற்கு நிறையவே சான்றுகளை காண முடிகிறது. இந்த கட்டத்திலாவது, தமிழ் மக்களது விடிவில் உண்மையான அக்கறை உள்ளவர்கள், பல நாடுகள் சேர்ந்து எமது போராட்டத்தை தோற்கடித்தது: மக்களுக்கு சரியான அரசியல் உணர்வு இருக்கவில்லை: புலிகள் அந்த காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம் வளர்த்தார்கள், ஆடு வளர்த்தார்கள்... என்ற பாணியிலான கதை சொல்லல்களை முடிவுகட்டி, நடந்து முடிந்த போராட்டத்தின் தோல்வி குறித்த வெளிப்படையாக பேசுவதும், எதிர்காலத்தில் மக்களது போராட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்தும் நேர்மையுடன் பேசுவது அவசியமானது இதில் பலரது சுயவிமர்சனங்களும் இப்போது அவசியமானவை ஆகின்றன. இதற்கு மேலும் கண் மூடித்தனமான விசுவாசம், உண்மைகளை காண மறுப்பது என்பவை தொடர்ந்தும் சில பிழைப்புவாத கூட்டங்களது நலன்களுக்காக பல இலட்சம் மக்களது உயிர்களை காவுகொடுக்கம் நிலைமை தொடரவே வழிவகுக்கும்.

புனிதம், தூய்மை, பரிசுத்தம், பூரணத்துவம் போன்ற மதம் சார்ந்த இலட்சியவாத சொல்லாடல்களை முற்றாக தவிர்த்து, ஒரு காரிய சாத்தியமான செயல்திட்டமொன்றை நோக்கி நகர்வதே மேற்கொண்டு தமிழ் மக்களது நலன்களை உத்தரவாதப்படுத்த உதவும்.

கனடாவில் இடம்பெற்ற தமிழினியின் "கூர்வாளின் நிழலில்" என்ற நூல் வெளியீட்டில் ரகுமான் ஜான் ஆற்றிய உரையின் திருத்தப்பட்ட எழுத்து வடிவம் (revised and edited version) இது.

## இவ்வாண்டு 110 பேர் டெங்குக்கு பலியாகி உள்ளனர்!




2017 ஜனவரி முதல் நாடு முழுவதும் 110 பேர் டெங்கு காய்ச்சலுக்கு பலியாகி உள்ளனர். வைரஸ் கிருமிகளினால் ஏற்படுகின்ற இரத்தககசிவு ஈரல் செயலிழப்பது முளையில் ஏற்படும் வீக்கம் ஒன்றுக்கு மேற்பட்ட உடல் அங்கங்கள் செயலிழப்பது மற்றும் வழமைக்கு மாறான மருத்துவ சிக்கல் நிலையாலேயே இம்மரணங்கள் சம்பவித்து உள்ளது என கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மருத்துவ கலாநிதியும் மருத்துவத்துறை விரிவுரையாளரும் தேசம்நெறக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் 2017 ஜனவரி முதல் மே 2017 வரையான 5 மாதங்களில் 43915 பேர் டெங்குவினால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் இவர்களில் 110 பேர் மரணித்துள்ளதாகவும் தெரிவித்தார். தான் இதுவரை 600 க்கு மேற்பட்ட டெங்குவினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இவ்வாண்டு சிகிச்சை அளித்ததாகத் தெரிவித்த அவர் அவர்களில் இருவரை தன்னால் காப்பாற்ற முடியவில்லை என்று தனது வேதனையைப் பகிர்ந்து கொண்டார்.

மார்ச் 2017 முதல் வாரத்தில் மட்டும் திருகோணமலை மாவட்டத்தில் 13 மரணங்கள் சமபவித்துள்ளது. இவற்றில் பெருமளவு 9 மரணங்கள் கிண்ணியாவில நிகழ்ந்துள்ளது. தமிழ் மாவட்டங்களில் திருகோணமலையே டெங்குவின் தாக்கம் அதிகம் உள்ள மாவட்டமாக உள்ளது.

சனத்தொகை நெரிசல் மிக்க மேல்மாகாணமே டெங்குவின் பாதிப்பு அதிகமாக உள்ள மாகாணாக உள்ளது. தற்போதைய கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் டெங்குவின் அபாயத்தை அதிகரித்து உள்ளது. அங்கு மே 2017 வரையான ஐந்து மாதங்களில் 18212 பேர் டெங்கு தாக்குதலுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர். அதற்கு அடுத்த படியாக 6801 பேர் கிழக்கு மாகாணத்தில் டெங்குவினால் பாதிக்கப்பட்டு உள்ளனர். வடமாகாணத்தில் 3552 பேர் டெங்குவினால் நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரிடையேயான நூல் வாசிப்பின் இன்றைய நிலை





>> என்.செல்வராஜா

**தாயகத்திலும்** புகலிடத்திலும் வார இறுதிகளில் இடம்பெறும் நூல் வெளியீட்டு அரங்குகளில், சந்திப்பு நிகழ்வுகளில் மட்டுமல்லாது அன்றாட சில்லறை உரையாடல்களிலும் எம்மவர்களின் வாய்வழி வந்துவிழும் பொதுவானதொரு விடயம் தமிழரிடையே வாசிப்புப்பழக்கம் குறைந்துவிட்டது என்ற அங்கலாய்ப்பாகவே இருக்கின்றது. வாசிப்பை நேசிப்போம் என்று ஒப்புக்குப் பேசியும் எழுதியும் விட்டு ஒதுங்கிவிடுவதே எமது பிழைப்பாகிப் போய்விட்டது.

லண்டனிலும் இதே நிலைதான். தமிழில் "வாசிக்காத" என்பதைவிட வாசிப்பதையே ஒட்டு மொத்தமாக நேரவிரயம் என்று கருதுவோரால் தான் இன்றைய லண்டன் தமிழ்ச் சமூகம் நிறைந்து வழிகின்றது. இவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தைத் தட்டியெழுப்பி, அறுபதுகளின் இறுதிவரை ஈழத்தில் இருந்த ஒரு அறிவார்ந்த சமூகச் சூழலை இங்கே சிறிதளவிலாவது மீளக் கட்டமைக்கவேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது.

லண்டனில் வாழும் எம்மவர்களில் பெரும்பான்மையானவர்கள் அடிப்படை நான்கு இலக்குகளை எவ்வகையிலேனும் அடைந்துவிடுவதையே தம் வாழ்நாள் குறிக்கோளாகக் கருதி இயங்குகின்றார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சுயமாக சட்ட வரம்புக்குள் நேர்வழியில் வருந்தி உழைத்தோ, அரசாங்கத்தையும் வங்கிகளையும் சுரண்டியோ தமது பொருளாதாரத்தை வளப்படுத்திக்கொண்டு லண்டனிலோ புறநகர்ப் பகுதிகளிலோ பெரிய வீடுகளை வாங்கித் தள்ளுவது, உயர் தரக் கார்கள் எனத்தாம் நினைக்கும் பீ.எம்.டபிள்யூ, மேர்க், பென்ட்லி என சொகுசு கார்களை, அவற்றின் இரண்டாம் தர விலையிலாவது வாங்கி வீட்டின் முன் நிறுத்திக்கொள்வது. இதன் மூலம் சமூக அந்தஸ்து ஒன்றினைப் பெற்றுக்கொள்வது.

2. பிள்ளைகளை அரசாங்கப் பாடசாலைகளில் படிப்பதை கௌரவக் குறைச்சலாகக் கருதி, அதிக பணச்செலவில் தனியார் பாடசாலைகளில், அல்லது கிரமர் (Grammar School) பாடசாலைகளில் சேர்த்துவிடுவது - பிள்ளைகளின் இயல்புகள், விருப்பு வெறுப்புக்கு ஏற்பவல்லாது, தமது ஆசைக்காக பிள்ளைகளை வைத்தியர்களாகவோ அல்லது இஞ்சினியர்களாகவோ உருவாக்கித் தம் சமூக அந்தஸ்தை "உயர் தரத்தினராக" உயர்த்திக் கொள்வது. இதற்காக தமது குழந்தைகளுக்குச் சுயமாகச் சிந்திக்கும் வாய்ப்பினை வழங்காமல், அவர்களின் விருப்பத்தேர்வுக்கு இடம்கொடுக்காமல் சிறு வயது முதலே அவர்களைத் தமது எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில் (Grooming) தயார் படுத்துவது.

3. இலங்கையில் வாழ்ந்தது போலவே மூன்று வேளை தமிழ்ச் சாப்பாட்டுடன், தமிழ்க்கலை கலாச்சார சமய நிகழ்ச்சிகளை அவற்றின் அர்த்தம் புரியாவிட்டாலும்கூட தாம் ஒன்றுகூடும் கொண்டாட்டங்களாக நடத்தி "தமிழுக்கு அணி சேர்ப்பதான கற்பனாலோகத்தில்", தாயகத்தில் வாழத்தவறிய வாழ்க்கையை இங்கேயே வாழ்ந்து மகிழ்வது.

4. ஐரோப்பியரின் அத்தியாவசியமான பண்பாகக் கருதப்படும் நேர முகாமைத்துவத்துக்கு -நேரம்தவறாமைக்கு கடுகளவும் முக்கியத்துவம் கொடாமல் தூக்கத்துக்கு முன்னுரிமை வழங்குவது. முக்கியமாக வார இறுதிகளில் இவர்களுக்கு பொழுது விடிதல் என்பது நண்பகலாகவே இருக்கும். இதில் கொடுமை என்னவென்றால், தமது தாமதத்தை எண்ணி வருந்தாமல், அதற்கான காரணத்தைப் பெருமையுடன் அடுத்தவருக்கு நியாயப்படுத்த முயற்சிப்பதாகும்.

இந்த நான்கு இயல்புகளுக்கு மத்தியில் புனிதமான குடும்ப உறவுகளையும், அறிவார்ந்த சிந்தனையின் விரிவினையும், தமது பிள்ளைகளுடனான ஆரோக்கியமான தொடர்பாடல்களையும் தொலைத்துவிட்டு, வேடதாரிகளாக நிற்கும் சராசரி புலம்பெயர் ஈழத்தமிழர்களை நாம் மாற்ற முயற்சிப்பது மிகுந்த சிரமத்தைத் தரும் பணியாகும். ஆனால், இந்த நான்கு இலக்குகளையும் முக்கிய நோக்காகக் கொள்ளாத ஒரு சிறு ஈழத்தமிழ்ச் சமூகமும் எம்மிடையே அநாதரவாக, ஏக்கத்துடன் உள்ளனர் என்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

இச்சிறு தொகையினர், மேலே சொல்லப்பட்ட பெரும்பான்மையானவர்களிடையே, அவர்களின் மேலாதிக்கத்தினால் ஒதுக்கப்பட்டவர்களாக (சாதியத்தால் அல்ல), எம்மிடையே மௌனமாக இயங்கிக்கொண்டு தான் உள்ளார்கள். இந்த எல்லைப் பிராந்திய மக்களைத்தான் நாங்கள் எமது வாசிப்பை மீட்டெடுக்கும் திட்டத்தின் முதற் பயனாளிகளாக்கிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் உலகில் சமூக விஞ்ஞானம் பத்து பெரும் பிரிவுகளை உள்ளடக்குகின்றது என்கிறார் மெல்வில் டுவி. சமூகவியல், புள்ளிவிபரவியல், பொருளாதாரம், சட்டம், பொது நிர்வாகமும் இராணுவ நிர்வாகமும், சமூகப் பிரச்சினைகளும் சமூக சேவைகளும், கல்வி, வர்த்தகம் - தொடர்பாடல் - போக்குவரத்து, பண்பாடு - பழக்கவழக்கம் - நாட்டாரியல், அரசியல் என இவை அனைத்தும் சமூகவிஞ்ஞானத்துக்குள் அடங்கு கின்றன. சமூக விஞ்ஞான அறிவியலில் நாங்கள் இந்த "அரசியல்" என்ற ஒன்றைப் பற்றி மாத்திரம் தான் எங்கும் பேசிவருகின்றோம். அது மாத்திரம்தான் நாம் வாழ வழிசொல்கிறது என்று கருதுகின்றோம். இதனால் மற்ற அனைத்து அறிவியல் துறைகள் பற்றிய சிந்தனைகளிலிருந்தும் அந்நியப்பட்டு விடுகின்றோம். காலாதிகாலமாக அரசியலுக்கு உணர்வுரீதியாக முக்கியத்துவம் வழங்கும் நாம் அறிவுரீதியாக அதனைப் பற்றிய பின்புலங்களை வாசித்தறியும் வாய்ப்பை இன்றளவில் மறுத்தே வந்திருக்கின்றோம். இன்று அதன் விளைவுகளை கண்கூடாகக் காண்கின்றோம்.



**இன்னும் ஒரு 20 ஆண்டுகளில் ஈழத் தமிழன் என்றால் யார் என்பதை மூன்றாம் நான்காம் தலைமுறைக்குச் சொல்லித்தர இரண்டாம் தலைமுறைக்கு வழிகாட்டிச் செல்ல வேண்டும். இங்கு தான் முதலாம் இரண்டாம் தலைமுறையினரிடையே "அறிவியல்" ரீதியான புரிதல்களை வளர்த்தெடுக்க வேண்டியது முக்கிய கடமையாகின்றது.**



சுதந்திரத்திற்குப் பின்னர் எமது இனப்பிரச் சினை பல்வேறு வடிவங்களை எடுத்த வேளை களில் எமது அன்றாட வாசிப்பக்கான தீனி யிட்டுவந்த தனித்துவமான சனசமூக நிலைய வாசிகசாலை களினது செயற்பாடுகள் படிப் படியாக மறைந்துவிட்டன. 1988ஆம் ஆண்டில் (மில்க் வைற் அதிபர் கனகராசா அவர் களின் பெறாமகனான) நண்பர் தவகோபால் அவர் களுடன் இணைந்து அவரது "யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தின்" வாயிலாக சனசமூக நிலையங்களின் நூலகங்களுக்கு உயிர்ப்பூட்டும் வகையில் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந் தோம். அன்றைய கணிப்பின் படி யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 334 க்கும் அதிகமான சன சமூக நிலையங்கள் இயங்கிவந்தன. அவற்றில் இன்று இயங்குபவை எத்தனை என்பதிலிருந்து நாங்கள் இழந்துவிட்ட பெருஞ்செல்வத்தின் பெறுமதி எமக்குப் புரியலாம்.

ஈழத்தின் இத்தகைய பகைப்புலத்தில் நின்று புலம்பெயர்ந்து பிரித்தானியாவுக்கு வந்த எம்மவர்கள் இங்கு கோயில்களை, நடனப்பள்ளிகளை நிறுவினார்கள், ஏன் தமிழ்ப் பள்ளிகளையும் தாபித்தார்கள். ஆனால் லண்டனில் வாழும் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான ஈழத் தமிழர்களுக்காக ஒரு நூலகத்தைக்கூட அவர்கள் உருவாக்கவில்லை. ஆயிரக்கணக்கான பலசரக்குக் கடைகள், நகைக் கடைகள், துணிக்கடைகள், உணவகங் கள் இருந்தும் லண்டனில் ஒழுங்கான ஒரு புத்தக விற்பனை நிலையம் இல்லை. இதுவே எமது "உன்னத அறிவுஜீவிகளான" புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் சமூகக் கோளாறுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமான சாட்சியமாகும்.

வாசிக்காத ஒருவரை விருப்புடன் வாசிக்கவைக்க வேண்டுமாயின் அவரது வாசிப்புக்குத் தீனி வேண்டும். மலிவு விலையில், அறிவுசார் நூல்களை இலங்கையில் இருந்து வரவழைத்து அவர்களின் பார்வைக்கு வைத்து, முன்னர் குறிப்பிட்ட அந்த விளிம்பு நிலை வாசகர்களை வரவேற்று அவற்றை எடுத்து வாசிக்கத் தூண்டினால் எம்மவரிடையே வாசிப் புப் பழக்கத்தை ஓரளவாவது ஏற்படுத்தலாம் என்ற தெளிவான, எளிமையான கொள்கையே என்னுடையது. தாயகத்திலும் வெளியீட்டுத்துறை புத்துயிர்பெற வாய்ப் பேற்படும்.



"யாழ்ப்பாண மாகாண அரசு" பற்றியோ "கேப்பாப்புலவு மக்களின் பிரச்சினைகள்" பற்றியோ அவர்கள் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. அவை பற்றிய பின்புலத்தை பெறும் வாய்ப்பினை பெற்றோர்கள் அவர்களுக்கு தமது அன்றாட குடும்ப சந்திப்புகளில் ஆரோக்கியமாக வழங்குவதில்லை. அதற்கான ஞானம் பெரும்பான்மையான பெற்றோருக்கு இருப்பதுமில்லை. கசப்பானதாயினும் இது தான் இன்றைய யதார்த்தம்.



எமது சந்திப்புக்கள், விரிந்த சமூக - அறிவியல் பார்வையை மக்களிடையே கொண்டுசெல்லத் தடையாக இந்த அரசியல் அலசல்கள் இருப்பதை ஆழ்ந்து கவனித்தால் புரிந்துவிடும். அரசியல் இல்லாமல் தமிழ் மக்கள் இல்லை என்ற நிலைமையில் நாம் தொடர்ந்து சிந்தித்தால் ஆங்கிலத்தில் கல்விகற்கும் இங்குள்ள இளைய தலைமுறையினரை நாம் என்றுமே கவரப்போவதில்லை. விஞ்ஞானபூர்வமான விவாதமேடைகளை அவர்கள் பள்ளி வாழ்க்கையிலும் பல்கலைக்கழக வாழ்க்கையிலும் கண்டுவருகிறார்கள். இன்று அவர்கள் "பிரிக்சிட்" பற்றி பெரிதும் விவாதிப்பவர்களாக இருக்கிறார்கள். ஆனால் "யாழ்ப்பாண மாகாண அரசு" பற்றியோ "கேப்பாப்புலவு மக்களின் பிரச்சினைகள்" பற்றியோ அவர்கள் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. அவை பற்றிய பின்புலத்தை பெறும் வாய்ப்பினை பெற்றோர்கள் அவர்களுக்கு தமது அன்றாட குடும்ப சந்திப்புகளில் ஆரோக்கியமாக வழங்குவதில்லை. அதற்கான ஞானம் பெரும்பான்மையான பெற்றோருக்கு இருப்பதுமில்லை. கசப்பானதாயினும் இது தான் இன்றைய யதார்த்தம்.

முதலாவது தலைமுறையினராகிய நாம் தான் இந்த மண்ணில் கால் பதித்தது முதல் "இலங்கை வாழ்க்கையை இங்கேயும் வாழ்ந்திட" பிடிவாதமாக முயன்றுகொண்டு இருக்கிறோம். எமது மக்களிடையே புகுந்த மண்ணின் (பிரித்தானியாவின் அன்றாட அவசியமான) செய்திகளை தமிழில் எடுத்துச்செல்லும் தமிழ் ஊடகங்களில் ஒன்றைக்கூட உதாரணமாகக் காட்ட என்னால் முடியவில்லை. பக்கச்சார்பற்ற உலக அரசியலை எமது மக்களின் வீட்டுத் தொலைக்காட்சிகளிலோ, வானொலிப் பெட்டிகளிலோ கேட்க வாய்ப்பினை ஊடகங்கள் தருவதில்லை. 2017 ஏப்ரல் 6ம் திகதி புதிய வரிவிதிப்புகளில் என்ன மாற்றம் நிகழ்ந்துள்ளன, பிரிக்சிட்டின் சாதக பாதகங்கள் பற்றி எல்லாம் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கத் தயாராக இல்லை. ஊடகங்கள் மற்றொரு தளத்தில் அவர்களைக் கவர "மானாட மயிலாட", "நீயா நானா" போன்ற நிகழ்ச்சிகளையும் தமிழக தொலைக்காட்சி சீரியல்களையும், தமிழகச் செய்திகளையும் தான் எமது வீட்டு முன்னறைகளுக்குள் கொண்டுவந்து கொட்டுகின்றன. இதனை எங்களால் வெற்றிகொள்ள இன்றுவரை முடியவில்லை. இங்குள்ள இலங்கைச் சிறுவர்களுக்கு இலங்கைத் தமிழே மறந்தபோய்விட்டது. அவர்கள் பேசும் கொச்சைத் தமிழிலும் தமிழகப் பாதிப்பு.

இன்னும் ஒரு 20 ஆண்டுகளில் ஈழத் தமிழன் என்றால் யார் என்பதை மூன்றாம் நான்காம் தலைமுறைக்குச் சொல்லித்தர இரண்டாம் தலைமுறைக்கு வழிகாட்டிச் செல்ல வேண்டும். இங்கு தான் முதலாம் இரணடாம் தலைமுறையினரிடையே "அறிவியல்" ரீதியான புரிதல்களை வளர்த்தெடுக்க வேண்டியது முக்கிய கடமையாகின்றது.

பொது நிகழ்வுகளில் அதிகமாகத் தம்மை இனம்காட்டிக்கொள்ளும் விழிம்புநிலை தமிழ் வாசகர்களை இனம்கண்டு அவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை சிறுகச் சிறுக அறிமுகப்படுத்த வேண்டும். தமிழில் அறிவியல் நூல்களை அவர்களிடையே கொண்டு சேர்க்கவேண்டும். வாசிப்பு ஒரு போதை மாத்திரை போன்றது. தொற்றிக்கொண்டால் இலகுவில் வெளியேற விடாது. தாம் சார்ந்தவர்களையும் துணைக்கு இழுத்துக்கொள்ளும் பண்பு வாசிப்பில் உள்ளது. இவ்வாறு சிறு தீப்பொறிகளை தனித்தனியாகப் பற்றவைப்பதன் மூலம்தான் பெருமெடுப்பில் அறிவுத் தீயை எம்மவரிடையே ஒரளவாகுதல் பற்றவைக்க முடியும்.

## யாழ் பல்கலைக்கழகம் அடிக்கடி சண்டைக்களம் ஆகின்றது!




மே 22, 2017 கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கு விரிவுரை நடந்துகொண்டிருந்த போது மூன்றாம் வருட மாணவர்கள் 30 பேர்வரை விரிவுரை அரங்கினுள் நுழைந்து ஈவிரக்கமின்றி இரண்டாம் வருட மாணவர்களைத் தாக்கி உள்ளனர். இதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்கள் அணியும் ஹெல்மெட் தலைக்கவசம் கொண்டு தாக்கியதில் பலருக்கு இரத்த காயம் ஏற்பட்டு உள்ளது. ஹெல்மெட்டின் கண்ணாடிப் பகுதி உடைந்து கூரான நிலையில் அதனை ஆயுதமாக்கி தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஒரு மாணவன் மீது அவனது கண்ணுக்கு கீழ்ப்பகுதி கிழிக்கப்பட்டதால் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட பல தையல்கள் போட வேண்டிய நிலையேற்பட்டது. பலருக்கு சிறு காயங்களும் அடித்ததன் வலியும் காணப்பட்டது.

இந்த மோதலைத்தடுப்பதற்காக வந்த விரிவுரையாளரை கடைத்தனத்தில் ஈடுபட்ட மாணவர்கள் நெஞ்சில் பிடித்துத் தள்ளி விட்டுள்ளனர். அந்த விரிவுரையாளர் அதன் பின் நடந்த சம்பவங்களை தனது கைத்தொலைபேசியில் பதிவு செய்துள்ளார்.

குறிப்பிட்ட சம்பவத்தை நேரில் கண்ட மாணவர்கள் தேசம்நெற்க்கு தெரிவிக்கையில் விரிவுரை மண்டபமே அல்லோல கல்லோப்பட்டு காணப்பட்டதாகவும் அந்த நேரத்தில் அவ்விரிவுரை அரங்கு ஒரு யுத்தகளமாக மாறி இருந்ததாகவும் தெரிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் பாதுகாப்பும் சமூகப் பொறுப்பும்

வித்தியா


போரின் பின்னர் தமிழ் சமூகம் பல்வேறு பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்கொண்டு வருகின்றது. அதில் சில புதிதாக முளைத்தவையாகவும் சில ஏற்கனவே காணப்பட்டு அதிகரித்த நிலையிலும் உள்ளன.

குறிப்பாக புதிதாக முளைத்த போதை வஸ்து பாவனையின் காரணமாக கொலை, கொள்ளை, வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் என்பன அதிகரித்துள்ளதென்றே கூறலாம். இந்நிலையில் தற்போது எமது சமூகத்தில் பேசப்படுபொருளாகவும் அடிக்கடி தோன்றி மறையும் விடயமாகவும் பாடசாலை மாணவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் காணப்படுகின்றது. புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைக்கு பின்னர் இது பரந்த அளவில் கவனத்தில் கொள்ளப்பட்ட விடயமாக காணப்பட்டாலும் இன்று வரையிலும் இது போன்ற சம்பவங்கள் முடிவில்லாமல் தொடர்வது மிகுந்த வேதனைக்குரிய விடயமாக உள்ளது.

எமது சமூகத்தில் பெண்பிள்ளைகளுக்குள்ள தடைகள் இன்னும் அகற்றப்படாத நிலையில் இவ்வாறான சம்பவங்களால் பெண்பிள்ளைகளின் சுதந்திரம், முன்னேற்றம், சாதனைகள் என்பன மிகுந்த சவாலுக்குட்பட்டுள்ளது என்றே கூறமுடியும். அண்மையில் யாழ் வரணிப்பகுதிப் பாடசாலையொன்றில் மாணவி மீது ஆசிரியரால் மேற்கொள்ளப்பட்ட வன்புணர்வு சம்பவமும் அதனைத் தொடர்ந்து அப்பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கைதுசெய்யப்பட்டமையும் எமது சமூகத்தில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதுடன் மாணவர்களின் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடவடிக்கைகளையும் கேள்விக் குட்படுத்தியுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் வடக்கில் நிகழ்வது சாதாரணமாகியுள்ளதை ஊடகச் செய்திகள் உறுதிப்படுத்தியுள்ளது.

ஒரு மாணவி வீட்டில் இருந்தாலும் ஆபத்து, வெளியில் போனாலும் ஆபத்து, பாடசாலைக்கு சென்றாலும் ஆபத்து என்றால் எங்களுடைய சமூகத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் எவ்வளவு தூரம் பேணப்படுகின்றது? வெறுமனே மார்ச் 8 மகளிர் தினமன்றும் ஒக்டோபர் 1 சிறுவர் தினமென்றும் உலகறிய கோஷமிடுவதால் என்ன பயன்?

ஒரு சம்பவம் நடந்தால் அதனைப்பற்றி ஒரிரு நாட்கள் கொந்தளிப்பதும் முகப்புத்தகத்திலோ அல்லது ஏதேனுமொரு சமூக வலைத்தளத்திலோ பதிவுகளை கொட்டுவதன் மூலம் எங்களுடைய முழுச் சமூகப்பொறுப்பையும் முடித்துக்கொண்டு திருப்தியடையும் நிலையிலேயே நாம் உள்ளோம். மாறாக குறித்த சம்பவங்களுக்கு காரணம் என்ன என்பது பற்றியோ, அதை எவ்வாறு அணுகப்போகின்றோம் பற்றியோ, அதை எவ்வாறு தீர்க்கப்போகின்றோம் என்பது பற்றியோ நாமும் சரி அதிகாரபீடங்களும் சரி சிறிதளவேனும் சிந்திப்பதாக தெரியவில்லை.


உண்மையில் இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன? போதைப்பொருட் பாவனைகளும் தென்னிந்திய சினிமாவும் மட்டும் தானா என்று சிந்தித்தால் ஆசிரியர் செய்யும் தவறுகளுக்கு இவற்றை எவ்வாறு காரணம் காட்ட முடியும்? ஒரு படித்த பட்டதாரி ஆசிரியர் சமூகத்தில் புத்திஜீவிகள் மட்டத்தில் உயர்ந்துள்ள ஒரு கல்விமான் பாடசாலை மாணவிகளை தவறான செயற்பாடுகளினூடாக அனுகுகின்றார் எனில் அவரை எவ்வாறு முன்னுதாரணமான கல்விமானாக ஏற்றுக்கொள்ள முடியும்.

இந்த இடத்தில் நிச்சயமாக ஒரு விடயத்தை நினைவுபடுத்திச் செல்வது அவசியமாகின்றது. கடந்த மகளிர் தின நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தனது உரையில் கடந்த காலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகங்களில் பாலியல் செயற்பாடு களில் ஈடுபட்ட பேராசிரியர்களை இடை நிறுத்தியுள்ளதாக பகிரங்கமாக தெரிவித்தி ருந்தமையை குறிப்பிட வேண்டும்.



இதிலிருந்து பாலியல் துஷ்பிர யோகம் பாடசாலைகளில் மட்டு மல்ல பல் கலைக்கழ கங்களிலும் இடம்பெற் றுள்ளது என்பது நாம் ஒவ்வொரு வரும் தலை குனிந்து ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மை யாகும். ஆதலால் கீழ்த்தரமான விரிவுரையாளர்களின் வழித் தோன்றலாக இவ்வாறான ஒழுக்க மற்ற ஆசிரியர்களை நோக்குவதில் தவறில்லை.

இந்நிலையில் இவற்றையெல் லாம் எவ்வாறு அனுகப் போகின்றோம் என்பது அடுத்த சவால்மிகு விடயமாக உள்ளது. எங்களுடைய தமிழ் சமூகத்தை பொறுத்த மட்டில் பாலியல் துஷ்பிரயோகம் என்பது அதனைப் புரிந்த குற்றவாளியை தண்டிக்கின்றதோ இல்லையோ அதனால் பாதிக்கப்பட்ட பிள்ளையை வஞ்சித்துவிடும். பாதிக்கபட்ட பெண் மீதே குற்றத்திற்குரிய பழியொன்றை ஏதேனும் ஒரு விதத்தில் தேடிக்கண்டுபிடித்து பாதிக்கப்பட்டவரை பல கோணங்களில் விமர்சித்தும் அவர்களுடைய எதிர்காலத்தை கேள்விக்குரியாக்கி விடுவதும் அல்லது அவர்களுக்கு எதிர்காலம் என்ற ஒன்று இல்லாமல் செய்யும் போக்கை கொண்டதாகவும் எங்கள் சமூக கட்டமைப்பு காணப்படுகின்றது. இந்த மனோநிலையே குற்றவாளிகளுக்கு சாதகமாக உள்ளதென்று கூறுவதில் தவறில்லை.

கலாச்சாரம், பண்பாடு, கௌரவம் என பலதை பேசும் எம் மக்கள் மத்தியில் குரல் உயர்த்தி தனக்கு நேரும் அவலத்தை கூறமுடியாத நிலையிலேயே எமது பெண்கள் உள்ளனர். அதனைத் தாண்டி இவ்வாறான சம்பவங்கள் வெளிவரும்போது இந்த பிரச்சனையை கையாளுபவர்கள் தவறான கோணத்தில் இவ் விடயத்தை கையாண்டு பாதிக்கப்பட்டவரை மேலும் படுகுழியில் தள்ளுகின்றனர். குறிப்பாக ஊடகங்கள் பாதிக்கப்பட்டவரின் உரிமைக்காக குரல் கொடுப்பதாக கூறி பிள்ளையைப் பற்றி வெளிப்படையாக அல்லது சில துப்புகளுடன் செய்திகளை வெளியிட்டு மக்கள் பாதிக்கப்பட்ட நபரை இலகுவாக அடையாளம் காண வழியமைக்கின்றன. மேலும் "யாழ்ப்பாணமே இப்படித்தான்" அல்லது " முழு ஆசிரியர் குழாமும் இப்படித்தான்" என்ற விம்பம் உருவாகும் வண்ணம் செய்திகளை அறிக்கையிடுகின்றன. ஊடகங்கள் இவ்வாறு சமூகப் பொறுப்பற்று நடப்பது பாலியல் துஷ்பிரயோகம் அதிகரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரண்டுகோலாக அமைகின்றது. இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் இப்பிரச்சனைகளை கவனமாக கையாள வேண்டிய பொறுப்பு நிச்சயம் ஒவ்வொரு தனி நபரையும் சாரும். இப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான பல்வேறு நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள முடியும். உதாரணமாக வடக்கின் உயர் கல்விப்பீடமான பல்கலைக்கழகத்தில் உளவியற்துறை கற்கைநெறி சிறப்பாக வளர்ச்சியடைந்து வருவதோடு அத்துறையின் கீழ் பல மாணவர்கள் கற்றுவருவதோடு உளவியலில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளை பல்கலைக்கழகம் வெளியேற்றுகின்றது. மேற்குறித்த உளவியலில் தனித்திறமையுள்ளோரை குழுக்களாக பாடசாலைகளுக்கு அனுப்பி அங்குள்ள மாணவர்களை உரிய உளவியல்சார் முறைகளினூடாக கண்காணிப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை அடையாளம் கண்டு அவர்களுடைய பிரச்சனைகளுக்கு சுமூகமான தீர்வுகளை வழங்க முடியும்.

மேலும் இன்னொரு தீர்வாக பாடசாலை மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் பிள்ளையிடம் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்து அதனை சரியாக கையாளும் திறனை கொண்டிருப்பவராக இருக்க வேண்டும். அதாவது பாலியல் ரீதியிலோ அல்லது பாதிக்கப்பட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பின் நிச்சயம் அவர்களுடைய நடத்தை, ஆளுமை, கல்விச்செயற்பாடுகள் போன்றவற்றில் மாற்றம் ஏற்படும். அதனைப் புரிந்துகொள்ளும் பக்குவம் உள்ளவராகவும் மாணவர்களை அவற்றிலிருந்து மீட்டெடுக்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்பவராகவும் இருத்தல் வேண்டும். பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உரிய வித்தில் உடலியல்சார் உளவியல்சார் சிகிச்சையளிப்பதோடு அவர்களுக்கு நம்பிக்கையளித்து இப்பிரச்சனையின் பாதிப்பிலிருந்து விடுபடச்செய்ய வேண்டும்.

இவை ஒருபுறம் இருக்க மறுபுறம் ஊடகங்கள் இவ்வாறான சம்பவங்களை தனிநபர் சார்ந்த செய்தியாக அறிக்கையிடாமல் புள்ளிவிபரங்கள் மூலம் அறிக்கையிட்டு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மேலும் பாதிப்பு ஏற்படுவது தவிர்ப்படுவதோடு பொதுமக்களுக்கு இது தொடர்பில் விழிப்புணர்வையும் ஏற்படுத்த முடியும்.

மேலும் பாதிப்பை ஏற்படுத்திய நபர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கால தாமதமின்றி கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான சட்டங்களும் தண்டனைகளும் இனிவருங்காலங்களில் குற்றமிழைக்க நினைப்பவர்களுக்கு முன்னெச்சரிக்கையாக அமையவேண்டும். மேலும் இக்குற்றவாளிகளாக ஆசிரியர்களோ அதிகாரிகளோ இருப்பின் இவர்களுடைய பதவிகள் மட்டுமன்றி பட்டங்களும் பறிக்கப்பட வேண்டும்.

இவற்றைவிடுத்து ஒரு சம்பவத்தைப் பற்றி ஓரிரு நாட்கள் வியாக்கியானித்து கொந்தளித்து அடங்குவதால் இவற்றிலிருந்து சமூகத்தை மீட்கவோ சீர்திருத்தவோ முடியாது. இவற்றை விட பெண்பிள்ளைகளிடத்தே இப்பிரச்சனை தொடர்பில் அவர்கள் கொண்டுள்ள மனப்பயத்தை அகற்றி அவர்களிடம் தற்துணிவை ஏற்படுத்துவதுடன் தம் பிரச்சனைகளை எதிர்த்து குரல் கொடுக்கும் ஆற்றலை வளர்க்க வேண்டும். மேலும் சிறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகள், மகளிர் உரிமைகள் தொடர்பில் உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

எனவே வளமான கல்விச் சமூகத்தை உருவாக்க கல்விக்கூடங்கள் பாதுகாப்பான இடமாக மாற்றப்பட வேண்டும். இதன் மூலமே மாணவர்கள் வெளித்தடைகளை எதிர்கொள்ளும் வல்லமையுள்ளவராக உருவாகுவார். அத்துடன் மேற்குறிப்பிட்ட பிரச்சனைகளையும் அதற்கான தீர்வுகளையும் கையாள்வதற்கு ஒவ்வொரு தனிநபரும் சமூகப்பொறுப்புடன் ஒன்றினைய வேண்டும்.

## வடக்கு , கிழக்கு இணைப்பு இல்லை! சமஸ்டி ஆட்சி வழங்கப்படாது!! புதிய அரசியல் யாப்பும் இல்லை!!! லண்டனில் அமைச்சர் மனோ கணேசன்




ரிஎன்ஏ தமிழ் மக்களுக்கு உண்மையைக் மறைக்கின்றது! மக்களை மாயைக்குள் வைத்திருக்கின்றது" என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பை குற்றம்சாட்டிய தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் "தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு உண்மையைச் சொல்லவில்லை, மக்களை ஒரு மாயைக்குள் வைத்திருக்கின்றது" என ஏப்ரல் 28, 2017 கிழக்கு லண்டனில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார். தமிழரசுக் கட்சியின் பிரித்தானியக் கிளையின் ஏற்பாட்டில் சட்டத்தரணி ஆர் ரட்ணசிங்கம் தலைமையில் நடைபெற்ற தந்தை செல்வாவின் நினைவு நிகழ்வில் அமைசர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட மாட்டாது, சமஸ்டி ஆட்சி வழங்கப்படமாட்டாது, புதிய அரசியல் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது, சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறமாட்டாது என்ற உண்மைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மக்களிடம் இருந்து மறைத்து வைக்கின்றனர். இலங்கை – இந்திய ஒப்பந்தம் சந்திரிகாவின் தீர்வுப்பொதி போன்றவற்றுக்கு அண்மையான எந்தவொரு தீர்வும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்வைக்கப்படப் போவதில்லை என்ற உண்மையை, தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்தி இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாமல் தமிழ் மக்களுக்கு பொய்யான மாயையைத் தோற்றுவித்துள்ளனர்" என்று அமைச்சர் மனோ கணேசன் தமிழ் தேசியக் கூட்டமைப்பை மிகக் கடுமையாகக் குற்றம்சாட்டினார்.

தற்போதைய நல்லாட்சி அரசின் அமைச்சரவையில் உள்ள மனோ கணேசன், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிக நெருக்கமானவர். தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசின் நிலைப்பாட்டை விளக்குகின்ற வகையில் அவரின் உரை அமைந்திருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவி மிதுலா தற்கொலை செய்வதற்கு முன் எழுதிய கடிதம்

மன்னாரில் புகையிரதத்தில் பாய்ந்து தற்கொலை செய்துகொண்ட மாணவி சண்முகலிங்கம் மிதுலா தயாளினி எழுதிய கடிதம். இக்கடிதம் தாயின் மீதுள்ள கோபத்தில் எழுதப்பட்டு உள்ளது. உணர்ச்சித் தூண்டு தலில் தன்னை அழித்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவுடன் எழுதப் பட்ட இக்கடிதத்தை மட்டும் வைத்துக்கொண்டு யாரும் எந்த முடிவுக ளுக்கும் வரவேண்டாம் என்ற எச்சரிக்கையுடன் இத் தற்கொலைக் குறிப்பை பிரசுரிக்கின்றோம். – தேசம்நெற்.



அன்புள்ள அம்மாவிற்கு

ஏன் அம்மா எனக்கு மட்டும் இப்படி நடக்கிறது? என்னுடைய வாழ்க்கையில் சந்தோசம், அன்பு பாசம் என்பவற்றை நான் இழந்து நிற்கின்றேன். உங்களால் தான் அதை நான் இழந்து நிற்கின்றேன். அம்மா உங்களுக்கு தெரியுமா நான் அம்மா அம்மா என்று பாசமுடன் ஏங்கிக் கொண்டிருக்கின்றேன். ஏன் அம்மா என்னைப் புரிந்துகொள்கிறீர்கள் இல்லை? நீங்கள் என்னைத் தனியாக தவிக்க விட்டுட்டீங்கள். என்னை பாசமாகவும் அக்கறையாகவும், என்னை சந்தோசமாகவும் வைத்திருக்கின்றவர்களையும் பிரிக்க நினைக்கின்றீர்கள். உங்கட மனசு கல்லு மாதிரியே வைச்சிருக்கிறீங்க. எப்படி அம்மா மனசு வந்தது? இது எல்லாம் செய்ய எனக்கு அரவணைப்பும் பாசமுடன் வளர்க்க நினைக்கிறீர்களா? அல்லது அழிக்க நினைக்கிறீர்களா? நான் வீட்டிலிருந்தா நான் செலவு என்று நினைக்கிறீர்கள். அப்படியென்றால் நான் வீட்ட விட்டு போனா பிறகு உங்களுக்கு செலவுகள் குறையும்தானே? அதன் பிறகு நீங்கள் அனைவரும் இருப்பீங்க தானே? ஏன் அம்மா உயிரோடு வைத்து துன்புறுத்துகிறீர்கள்? என்னைப் பிடிக்கல என்றா விசம் தந்து கொல்ல வேண்டியது தானே? ஏன் இப்படி செய்கிறீர்கள்.

நான் இதையெல்லாம் விட்டிட்டு அம்மா அம்மா என்று வலிந்து கொண்டிருக்கின்றேன். ஆனால் நீங்கள் எனக்கு துரோகம் செய்கின்றீர்கள். அம்மா இந்தப் பிறவியில் எனக்கு ஒருத்தரையும் பிடிக்கவில்லை. என்ன நன்மைக்கு இந்த உலகத்தில் வாழ்வேன்? வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது. இந்த உலகத்தில் பிடித்தவர்கள் இருந்தாலும் அவர்களுடன் சேர்ந்து இருக்க விடமாட்டன் என்று நினைக்கிறீர்கள். சந்தோசமாக கதைத்து பேசி பழகுவதற்கு ஒருவரும் இல்லையே. கதைப்பதற்கு பலர் இருந்தாலும் அவர்களையும் என்னையும் கெடுக்கிறீர்கள். தனியாக தவிக்கிறேன் எனக்கு வாழ்க்கையில் அதிர்ஸ்டம் இல்லை. துர்அதிரஷ்டம் தான் இருக்குறது. ஏன் அம்மா இப்படியொரு துரோகம் செய்கிறீர்கள்? அடுத்த பிறவியில் சந்தோசமான வாழ்க்கை அமைய வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கின்றேன். நீங்களும் வீட்டிலுள்ளவர்களும் சந்தோசமாகவும் இருக்க இறைவனை பிரார்த்திக்கின்றேன். அத்தோடு எனது மரணத்திற்கு ஒருவரும் காரணம் இல்லை அதற்கான காரணம் எனது வாழ்க்கையில் சந்தோசம் இல்லை. அதேமாதிரி பெற்றோருடைய அன்பும் அரவணைப்பும் கிடைக்கவில்லை. அதனால் நான் இந்த முடிவை எடுத்தேன்.

இப்படிக்கு சண்முகலிங்கம் மிதுலா தயாளினி

I love u mammy (மம்மி)

என்னைத் தேட வேண்டாம் என்னைச் சந்தோசமாக வாழவிடவில்லை எனக்கு ஒரே பேச்சும் ஏச்சும் வாங்கிக்கொண்டு என்னால இருக்க முடியாது. இத்துடன் வாழ்க்கையை முடித்துக்கொள்கின்றேன்.

நன்றி

பாசமிகு மகள் எஸ்.மிதுலா

மீண்டும் மீண்டும் சொல்கிறேன் என் சாவிற்கு யாரும் காரணம் இல்லை. நான் சாவதற்கு காரணம் என்று சொன்னால் எனது குடும்பமே காரணம்.

எனக்கு வாழ்க்கையில் சந்தோசம் கிடைக்கவில்லை அதனால்தான் நான் இந்த முடிவை எடுக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ... எம் தமிழ்
மக்களே ...
தலை சாய்க்கின்றேன்
உங்கள் தலைவர்களுக்கல்ல
உங்களுக்கு ...
ஆயிரம் இரவுகள்
அராஜகத்தை அனுபவித்த பின்
எமது தேசத்தின் எல்லைகளில்
எலும்புக கூடுகளாய்
இருக்கும்
உங்களுடன் பாரிய
வேதனையைப்
பகிர்ந்து கொள்கின்றேன்!
இறந்தவர்களே உங்கள்
தியாகம்
வீண்போனாலும்
எங்கள் நெஞ்சங்களில்
உங்கள் நினைவுகள்
என்றும் வேரூன்றி
இருக்கும்...!

- இந்துவின் மைந்தன் பிரேம்சங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org